ஓம் ஸ்ரீ அகத்தீசர் துணை

அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி!!
சத்தியமே அகத்தியம்! அகத்தியமே ஜெயம்!!

**பரமானந்த சதாசிவ சற்குரு**

**தவத்திரு. ரெங்கராஜதேசிக சுவாமிகள்**

**அருளிய**

# சுகமான வாசியே அகத்தீசராகும்

ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை
நாடாதீர் பொய்யுலகை நம்பாதீர் வாடாதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்து இனி இங்கு
என்மார்க்கமும் ஒன்றாமே.

திருஅருட்பா – சுத்த சிவநிலை – 41.

**நூல் விளக்கம்**


| | | |
|---|---|---|
| நூல் | – | சுகமான வாசியே அகத்தீசராகும் |
| **முதற்பதிப்பு** | – | **19–01–2003** |

**தைப்பூச விழா மற்றும் மகாமந்திர உபதேச தீட்சை விழா வெளியீடு**

| | | |
|---|---|---|
| பக்கம் | – | 104 |
| விலை | – | ரூ. 12 |

வெளியீடு

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில், துறையூர் –621 010.
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி எண் : 04327–255684, 255184, 255784.
Fax. 04327 – 255284
Homepage : www.agathiar.org
e-mail : agathiartrust.in@agathiar.org

நூல் வெளியிட வேண்டும் என்றால் கல்வியும், ஞானத்திற்குரிய அறிவும் இருக்க வேண்டும். இவ்விரண்டுமே இல்லாத பாவி யான் ஆர்வத்தின் காரணமாக ஞானிகள் பாடல்களுக்கு (இந்நூலில் உள்ள) என் சிற்றறிவுக்குத் தோன்றியவாறு விளக்கம் தந்திருக்கிறேன். இதில் குற்றங்கள் இருப்பது இயல்பே. கற்றுணர்ந்த சான்றோர்கள் பொறுத்தருள வேண்டும் என்று திருவடி பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

அன்பர் இரா. மாதவனுக்கு பல்வேறு வேலைப்பளு இருந்தபோதிலும் இரவுபகல் பாராது அவ்வப்போது நான் சொல்லுகின்ற கருத்துக்களை எழுதுவார். இதற்குமுன் அனுபவ விளக்கப்பத்திரிக்கையும் மேலும், சித்தர்கள் போற்றித்தொகுப்பும் மற்றும் சிறுசிறு வெளியீடுகளும் அவருடைய முயற்சியால்தான் வெளியிடப்பட்டன.

அனுபவ விளக்கப்பத்திரிக்கையும், சுகமான வாசியே அகத்தீசராகும் என்னும் இந்த நூலும் அன்பர்கள் பெற்றுப் பயனடைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நூலில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டினால் அதைத் திருத்தம் செய்து வெளியிட வாய்ப்பாக இருக்கும் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நூல்கள் வெளியிட காரணமாக இருந்த அன்பர் மாதவனும், அவரது குடும்பத்தார்களும் மற்றும் அவரைச் சார்ந்தவர்களும் எல்லா வளமும் நலமும் பெற்று நீடு வாழவேண்டும் என்று நன்றியுடனும், மகிழ்ச்சியுடனும் மனமார வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,

**ரெங்கராஜ தேசிகன்**

ஓங்காரக்குடில், துறையூர்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

**திருமந்திரம் 1598.**

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம்
என்று உலகறியச்செய்த வள்ளல்,
**குருநாதர், தவத்திரு ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**
அவர்கள் தொகுத்து வழங்கிய

## சித்தர்கள் போற்றித் தொகுப்பு

ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி
ஓம் அகப்பைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் அசுவினித்தேவர் திருவடிகள் போற்றி
ஓம் அத்திரி மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் அநுமான் திருவடிகள் போற்றி
ஓம் அம்பிகானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் அருணகிரிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் அருள்நந்திசிவாச்சாரியார் திருவடிகள் போற்றி
ஓம் அல்லமாபிரபு திருவடிகள் போற்றி
ஓம் அழுகண்ணிச்சித்தர் திருவடிகள் போற்றி 10

ஓம் இடைக்காடர் திருவடிகள் போற்றி
ஓம் இராமலிங்கசுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் இராமதேவர் திருவடிகள் போற்றி
ஓம் இராமானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் உமாபதி சிவாச்சாரியார் திருவடிகள் போற்றி
ஓம் ஔவையார் திருவடிகள் போற்றி
ஓம் கஞ்சமலைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கடைப்பிள்ளைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கடுவெளிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கண்ணானந்தர் திருவடிகள் போற்றி 20

ஓம் கண்ணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கணநாதர் திருவடிகள் போற்றி
ஓம் கணபதிதாசர் திருவடிகள் போற்றி
ஓம் கதம்பமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் கபிலர் திருவடிகள் போற்றி
ஓம் கமலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கருவூர்தேவர் திருவடிகள் போற்றி
ஓம் கல்லுளிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கலைக்கோட்டு முனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கவுபாலச்சித்தர் திருவடிகள் போற்றி 30

ஓம் கனராமர் திருவடிகள் போற்றி
ஓம் காகபுஜண்டர் திருவடிகள் போற்றி
ஓம் காசிபர் திருவடிகள் போற்றி
ஓம் காலாங்கிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் குகைநமச்சிவாயர் திருவடிகள் போற்றி
ஓம் குதம்பைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் குமரகுருபரர் திருவடிகள் போற்றி
ஓம் குருதட்சணாமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் குருராஜர் திருவடிகள் போற்றி
ஓம் குறும்பைச்சித்தர் திருவடிகள் போற்றி 40

ஓம் கூர்மானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் கொங்கணேஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் கோரக்கர் திருவடிகள் போற்றி
ஓம் கௌசிகர் திருவடிகள் போற்றி
ஓம் கௌதமர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கமுனிச் சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கர மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் சங்கிலிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சச்சிதானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சட்டநாதர் திருவடிகள் போற்றி 50

ஓம் சண்டிகேசர் திருவடிகள் போற்றி
ஓம் சத்யானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சிவயோகமாமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சிவவாக்கியர் திருவடிகள் போற்றி
ஓம் சிவானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுகப்பிரம்மர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் சூதமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சூரியானந்தர் திருவடிகள் போற்றி 60

ஓம் சூலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சேதுமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சொரூபானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் ஜம்பு மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் ஜமதக்னி திருவடிகள் போற்றி
ஓம் ஜனகர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனந்தனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனாதனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனக்குமாரர் திருவடிகள் போற்றி
ஓம் ஜெகநாதர் திருவடிகள் போற்றி 70

ஓம் ஜெயமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் ஞானச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் டமாரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் தன்வந்திரி திருவடிகள் போற்றி
ஓம் தாயுமான சுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருகோணச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருஞானசம்பந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருநாவுக்கரசர் திருவடிகள் போற்றி
ஓம் திருமாளிகை தேவர் திருவடிகள் போற்றி 80

ஓம் திருமூலதேவர் திருவடிகள் போற்றி
ஓம் திருவள்ளுவர் திருவடிகள் போற்றி
ஓம் துர்வாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் தேரையர் திருவடிகள் போற்றி
ஓம் நந்தனார் திருவடிகள் போற்றி
ஓம் நந்திஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் நாதாந்தசித்தர் திருவடிகள் போற்றி
ஓம் நாரதர் திருவடிகள் போற்றி
ஓம் நொண்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பட்டினத்தார் திருவடிகள் போற்றி 90

ஓம் பத்ரகிரியார் திருவடிகள் போற்றி
ஓம் பதஞ்சலியார் திருவடிகள் போற்றி
ஓம் பரத்துவாசர் திருவடிகள் போற்றி
ஓம் பரமானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் பராசரிஷி திருவடிகள் போற்றி
ஓம் பாம்பாட்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பிங்களமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் பிடிநாகீசர் திருவடிகள் போற்றி
ஓம் பிருகுமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் பிரும்மமுனிவர் திருவடிகள் போற்றி 100

ஓம் பிர்முகமது திருவடிகள் போற்றி
ஓம் புண்ணாக்கீசர் திருவடிகள் போற்றி
ஓம் புலத்தீசர் திருவடிகள் போற்றி
ஓம் புலிப்பாணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பூனைக்கண்ணார் திருவடிகள் போற்றி
ஓம் போகமகாரிஷி திருவடிகள் போற்றி
ஓம் மச்சமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் மஸ்தான் திருவடிகள் போற்றி
ஓம் மயூரேசர் திருவடிகள் போற்றி
ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி 110

ஓம் மார்க்கண்டேயர் திருவடிகள் போற்றி
ஓம் மாலாங்கன் திருவடிகள் போற்றி
ஓம் மிருகண்டரிஷி திருவடிகள் போற்றி
ஓம் முத்தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் மெய்கண்டதேவர் திருவடிகள் போற்றி
ஓம் மௌனசித்தர் திருவடிகள் போற்றி
ஓம் யாகோபு திருவடிகள் போற்றி
ஓம் யூகிமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் யோகச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் யோகானந்தர் திருவடிகள் போற்றி 120

ஓம் ரோமரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வசிஷ்டமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வரதரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வரரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வராகிமிகி திருவடிகள் போற்றி
ஓம் வால்மீகி திருவடிகள் போற்றி
ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி

**ஓம் என்னிலா கோடி சித்தரிஷி கணங்கள் திருவடிகள் போற்றி போற்றி.**

<u>நிறைவுப்பாடல்</u>

வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம்.

**உலகத்தில் உயர்ந்தது பக்தியே**

பாரி லுயர்ந்தது பக்தி – அதைப்
பற்றின பேர்க்குண்டு மேவருமுத்தி
சீரி லுயரட்ட சித்தி – யார்க்குஞ்
சித்திக்கு மேசிவன் செயலினால் பக்தி.

**கடுவெளிச்சித்தர்.**

**மேற்கண்ட கடுவெளிச்சித்தர் பாடலின் சாரம்:**

உலகத்தில் ஒருசிலர் யோகாப்பியாசமாகிய யோகப்பயிற்சி செய்தால் கடவுளை அடையலாம் என்று எண்ணுவார்கள். ஒருசிலர் செந்தூரம், சுண்ணம், பஸ்பம், லேகியம் மற்றும் பல்வேறு வகையான மூலிகைகளை சாப்பிட்டால், காயசித்தி பெற்று ஞானம் பெறலாம் என்று நினைப்பார்கள். ஒருசிலர் மட்டும் நவகோடி சித்தர்களுக்கு தலைவரும் குருமுனி பட்டம் பெற்ற அகத்தீசரை உருகி தியானம் செய்தால் பாவங்கள் நீங்கி புண்ணியம் பெருகும் என்றும், ஆன்மாவைப் பற்றியும், ஆன்மா ஏன் மாசுபட்டது என்பதை அறிந்தும், ஆன்மா மாசு நீங்கினால் ஆன்மஜோதி தோன்றும் என்றும் அதுவே மரணமில்லா பெருவாழ்வு கைகூடும் என்றும் அறிந்து

ஆசான் அகத்தீசனை தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும், குறைதீர்க்கும் குலதெய்வமாகவும் எண்ணி பூஜிப்பார்கள். இவர்களே பெரும்பேறு பெற்றவர் ஆவார்கள். இவர்கள் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் செய்யும் வல்லவர் ஆவார்கள்.

## பக்தி மார்க்கமே சித்தி தரும்

- உண்மை என்பது அகத்தீசர் திருவடியே.
- உண்மை பக்தியே உயர்த்தும் உன்னை.
- பக்தி செலுத்தசெலுத்த பாவங்கள் பொடியாகும்.
- பக்தி செலுத்தசெலுத்த பண்புகள் ஓங்கும்.
- பக்தி செலுத்தசெலுத்த பரவசம் அடையலாம்.
- பக்தி செலுத்தசெலுத்த பாவபுண்ணியம் அறியலாம்.
- பக்தி செலுத்தசெலுத்த பண்பு ஈதென்று அறியலாம்.
- பக்தி செலுத்தசெலுத்த பரிவுடன் வாழலாம்.
- பக்தி செலுத்தசெலுத்த பிறருக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணலாம்.
- பக்தி செலுத்தசெலுத்த பாசம் என்பது உடம்பு என்று அறியலாம்.
- பக்தி செலுத்தசெலுத்த பதியாகிய சுழிமுனையை அறியலாம்.
- பக்தி செலுத்தசெலுத்த பசு என்பது உயிர் என்று அறியலாம்.
- பக்தி செலுத்தசெலுத்த பசு பாசத்தை பதியுள் சேர்க்கலாம்.

▪பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப்போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்
பதி அணுகில் பசுபாசம் நிலாவே.

**திருமந்திர உபதேசம் – 3.**

* பக்தி செலுத்த செலுத்த **பசு என்றால் ஆன்மா என்றும், அதுவே சூரியகலை என்றும், பாசம் என்பது உடம்பென்றும், அதுவே சந்திரகலை என்றும், ஆக உடம்பையும், உயிரையும், பதி என்ற சுழிமுனையில் ஒடுக்கினால் மீண்டும் பிறவி வராது** என்று அறியலாம்.
* பக்தி செலுத்தசெலுத்த பணிவுடன் வாழலாம்.
* பக்தி செலுத்தசெலுத்த பகைமையை நட்பாக்கலாம்.
* பக்தி செலுத்தசெலுத்த பண்புடன் வாழலாம்.
* பக்தி செலுத்தசெலுத்த பகைமையை நீக்கலாம்.
* பக்தி செலுத்தசெலுத்த பாவத்தை போக்கலாம்.
* பக்தி செலுத்தசெலுத்த பக்குவம் உண்டாகும்.
* பக்தி செலுத்தசெலுத்த படாடோபம் நீங்கும்.
* பக்தி செலுத்தசெலுத்த வீண் ஆரவாரம் செய்யயார்.
* பக்தி செலுத்தசெலுத்த பிறரை மதித்து வாழ்வார்.
* பக்தி செலுத்தசெலுத்த மன்னிக்கும் குணம் உண்டாகும்.
* பக்தி செலுத்தசெலுத்த பழிவாங்கும் உணர்ச்சி நீங்கும்.
* பக்தி செலுத்தசெலுத்த பரோபகாரி ஆகலாம்.
* பக்தி செலுத்தசெலுத்த நன்மனம் ஓங்கும்.
* பக்தி செலுத்தசெலுத்த வன்மனம் நீங்கும்.
* பக்தி செலுத்தசெலுத்த சிறப்பறிவு ஓங்கும்
* பக்தி செலுத்தசெலுத்த ஆன்மாவை அறியலாம்.
* பக்தி செலுத்தசெலுத்த பாசத்தை அறியலாம்.
* பக்தி செலுத்தசெலுத்த பாசத்தை போக்கலாம்.

## பக்தி செலுத்த அறிவுரைகள்

மகான் சட்டைமுனிநாதர் அவர்கள் இயற்றிய ஞானவிளக்கம் 51–ல் 21–ஆம் பாடல் :

போடுவது திலதமடா மூலர் மைந்தர்
போகர் கருவூராரைத் தியானம் பண்ணு
நாடுநகர தனிலுள்ள ஜீவசெந்து

நாதாக்கள் சித்தருக்கும் தோணாதையா
ஏடுதனில் எழுதினதோர் பாடல் என்று
எண்ணாதே ஒருநாளும் தப்போ இல்லை
தேடினபேர் பொருள்கோடி தனமீந்தாலும்
செப்பாதே இக்கருவை(ரகசியத்தை) உலகத்தோர்க்கே.

**மேற்கண்ட பாடலின் சாரம் :**

வைணவர்கள் நெற்றியில் நாமம் இடும்பொழுது **ஓம் நமோ நாராயணா** என்றோ **ராமா** என்றோ நாமமிட்டுக்கொள்வார்கள். சைவர்களோ நெற்றியில் விபூதி வைக்கும்பொழுது **ஓம் விக்னேஷ்வரா** என்றோ **ஓம் முருகா** என்றோ **ஓம் நமச்சிவாய** என்றோ அல்லது **சிவ சிவ** என்றோ நெற்றியில் விபூதி வைத்துக்கொள்வார்கள். அது அவரவர்களின் கொள்கையாகும்.

மகான் சட்டைமுனிநாதர் அவர்களோ நெற்றியில் விபூதி வைக்கும்பொழுது **ஓம் திருமூலதேவாய நம** என்றும் அவர் மைந்தராகிய காலாங்கிநாதரை **ஓம் காலாங்கிதேவாய நம** என்றும் **ஓம் போகதேவாய நம** என்றும், **ஓம் கருவூர்தேவாய நம** என்றும் நான்கு மகான்களின் நாமத்தைச் சொல்லி நெற்றியில் விபூதி வைத்தால் கணக்கில் அடங்காப் பிறவிகள் எடுத்துச்செய்த பாவங்கள் பொடிபட்டுப்போகும். மேலும், ஞானியும் ஆவார்கள் என்று சொல்கிறார்கள்.

இந்த உலகத்தில் உள்ள சில ஆன்மீகவாதிகளோ மற்றும் உள்ள சில கல்வியாளர்களோ இதை யாரும் பின்பற்றுவதில்லை. காரணம் அவர்களுக்கு யாரும் இந்த உயர்ந்த உபதேசத்தை உபதேசிப்பதில்லை. அப்படியே சிலர் உபதேசித்தாலும் சிலர் அதைக்

கடைப்பிடிப்பதில்லை. அது அவரவர்களின் வினைப்பயன். இந்த உயர்ந்த மார்க்கத்தை ஆசான் சட்டைமுனிநாதர் ஏதோ ஏட்டில் எழுதிவைத்துவிட்டார் என்று லேசாக நினைத்துவிடவேண்டாம். இந்த மார்க்கத்தை புண்ணியம் செய்த மக்களே உணர்வார்கள், மற்றவர்களோ இதை உணரமாட்டார்கள். அது அவர்களின் வினைப்பயனாகும்.

இந்த உயரிய மார்க்கத்தை மகான் சட்டைமுனி அவர்கள் **உலக ஆன்மீகப் பிள்ளைகளே! பிழைத்துக்கொள்ளுங்கள்!** என்று கருணையோடு சொன்னதாகும். எனவே, காலை 5 மணிக்கு எழுந்து காலைக்கடனை முடித்துவிட்டு, வெண்ணிறத் துணியை விரித்து அதன்மேல் அமர்ந்து திருவிளக்கு ஏற்றியும், நறுமணம் உள்ள பத்தி ஒன்றை வைத்தும், காலையில் 10 நிமிடமும், மாலையில் 10 நிமிடமும் **ஓம் திருமூலதேவாய நம, ஓம் காலாங்கிதேவாய நம, ஓம் போகதேவாய நம, ஓம் கருவூர்தேவாய நம** என்று திரும்பத்திரும்ப நான்கு மகான்களின் நாமத்தை நாமஜெபம் செய்து வந்தால் வீடுபேறு அடையலாம் (முக்தி பெறலாம்). மேற்கண்ட **பாடல் வைரம் பொருந்திய தீவினையாகிய மரத்தை வேரோடு வெட்டித்தள்ளும் கோடாலி ஆகும்.**

சில ஆன்மீகவாதிகள் பலப்பல சித்தத் தத்துவ நூல்களைப் படித்தும் மற்றும் பக்திநூல்களைப் படித்தும், இதில் என்ன சொல்லியுள்ளது, அதில் என்ன சொல்லியுள்ளது என்று ஆராய்ச்சி செய்துகொண்டே இருப்பார்கள்: பூஜை செய்யமாட்டார்கள். அவர்களுக்கும் முதுமை வந்துவிடும். அவர்களுடைய ஆராய்ச்சிகளுக்கும் முதுமை வந்துவிடும். ஆகவே எந்த ஆன்மலாபமும் பெறமுடியாமல் வீணாகிவிடுவார்கள். மேற்கண்ட நான்கு மகான்களின் நாமத்தைச்சொல்லி

பூஜைசெய்து வந்தால் எந்த நூலையும் படிக்கவேண்டிய அவசியம் இல்லை, ஆராய்ச்சியும் அவசியமில்லை.

பல சாஸ்திர நூல்களையும், தோத்திர நூல்களையும் படித்து, பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்துகொண்டே இருப்பார்கள். இவர்கள் ஒரு எல்லைக்குட்பட்டே இருந்துவிடுவார்கள். சலிப்பில்லாமல் தினமும் ஞானியர்களைப் பூஜைசெய்து வருபவர்கள் எல்லையில்லாப் பேரானந்தம் பெற்று பெருவாழ்வு வாழ்வார்கள்.

## பெண்கள் நெற்றியில் பொட்டு (திலகம்) வைக்கும்பொழுது என்ன சொல்ல வேண்டும்?

பெண்கள் நெற்றியில் பொட்டு வைக்கும்பொழுது **ஓம் திருமூலதேவாய நம, ஓம் காலாங்கிதேவாய நம, ஓம் போகதேவாய நம, ஓம் கருவூர்தேவாய நம** என்று சொல்லி நெற்றியில் பொட்டு வைக்க வேண்டும். இவ்வாறு காலையும், மாலையும் நான்கு மகான்களின் நாமத்தைச் சொல்லிவிட்டு, நெற்றியில் பொட்டு வைத்தால் உடல் ஆரோக்கியம் உண்டாகும், திருமணம் தடைபட்டவர்களுக்கு திருமணம் நடக்கும், பண்புள்ள புத்திரபாக்கியம் அமையும், தகுதியுள்ள கணவன் அமைவான், இனம் புரியாத கவலைகள் நீங்கும், தன்னம்பிக்கை உண்டாகும், எந்தத் துன்பத்தைக் கண்டும் சோர்வடையமாட்டார்கள், எதையும் தாங்கிக்கொள்ளும் மனஉறுதி ஏற்படும், உதிரப்போக்கு, வெள்ளைப்படுதல், மலச்சிக்கல் நீங்கும், வீண் ஆடம்பரத்தில் நாட்டம் கொள்ளமாட்டார்கள், மற்றவர்கள் பிரச்சினையில் கவனம் செலுத்தமாட்டார்கள், தாம் உண்டு தன் வேலை உண்டு என்று தம் கடமையைச் செய்வார்கள்,

இன்னும் அநேக நற்குணங்களும் அமையும். மேலும் ஞானமும் சித்திக்கும்.

**ஞானியர்களின் திருவடியைப் பூஜிப்போம், ஞானம் பெற்று இன்புற்று வாழ்வோம்.**

---------

## சித்திக்கு வழிகாட்டும் தேன்

லபிக்கவழி (சித்திக்க வழி) சொல்லுகிறேன்
ஆத்தாளே நந்திதிருமூலரையும்
லபிக்கக்காலாங்கியையும் ஆத்தாளே
நாதாந்தபோகரையும்
சத்திசிதம்பரமும் ஆத்தாளே சட்டமுனி
பூசைசெய்வாய்
உத்தமக்கொங்கணரை ஆத்தாளே உசிதமாய்
பூசைசெய்வாய்
கருவூரார் ஆனந்தர் ஆத்தாளே கண்டு
வழிதெரிந்தோர்
ஒருநெறியாய் இவர்களையும் ஆத்தாளே
உண்மையுடன் பூசைசெய்தால்
சண்டாளன் ஆனாலும் ஆத்தாளே தான்
வேதைகாண்பானே
கண்டசேதி சொன்னேன் நான் ஆத்தாளே

**மகான் அழுகண்ணர்.**

**மேற்கண்ட மகான் அழுகண்ணர் கவியின் சாரம்**

இயற்கைப் படைப்புகளில் மனிதவர்க்கம்தான் உயர்ந்ததாகும். காரணம் மரணமில்லாப் பெருவாழ்வு பெறுதற்குரிய அறிவு இவர்களுக்குத்தான் உண்டு. மனிதனுக்குள் சொர்க்கமாகிய மோட்சத்தை

எல்லாம்வல்ல இயற்கை அன்னை அமைத்திருக்கிறாள், அப்படி அமைத்திருந்தாலும் அதை நம்மால் உணர முடியாது. அதைப்பற்றி நன்கு உணர்ந்தவர்கள் நமக்கு உபதேசிக்க(சொல்ல) வேண்டும். இல்லையென்றால் நம்மால் அதை அறிந்துகொள்ள முடியாது. அறிந்தவர்கள் நமக்குச் சொல்ல வேண்டுமென்றால் அதற்குரிய கொள்கைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். பசியாற்றி வைத்தலும், ஞானிகள் யார் என்று அறிந்து அவர்களின் திருவடியை உருகி பூஜித்தலும் வேண்டும்.

பூஜைசெய்ய, பூஜைசெய்ய சிறப்பறிவு உண்டாகும். அன்னதானம் செய்து வந்தால் புண்ணியமும் உண்டாகும். பூஜைசெய்வதால் அருள் பலமும், அன்னதானத்தால் புண்ணிய பலமும் சேரும். புண்ணிய பலமும், அருள் பலமும் சேரச்சேர எது நன்மை? எது தீமை? என்று உணர முடியும். நன்மையானவற்றைக் கடைப்பிடிப்பதும், தீமையானவற்றை நீக்கவும் நமக்கு ஆற்றல் உண்டாகும். உயிர்க்கொலை செய்வதாலும், புலால் உண்பதாலும் மனம் மென்மை ஏற்படாது.

பொருள் சேர்க்கும்பொழுது, இது நீதிக்குட்பட்டதா? அல்லது பிறர் வயிறெரிய வந்ததா? என்று உணர முடியும். மேலும் பொருளாதாரத்தின் இயல்பும் அறியலாம். இயல்பு அறிந்தவர்கள்தான் தனக்குப் பொருள் சேரும்பொழுதே அறப்பணிகள் செய்து ஆன்மபலம் பெற்றுக்கொள்வார்கள். ஆன்மபலம் பெற்றுக்கொண்டவர்களுக்குத்தான் முன்செய்த பாவத்தால் வருகின்ற தீமைகளை உடைத்தெறியும் வல்லமை உண்டு. மேலும் ஆன்ம ஜெபமாகிய (உயிராகிய மூச்சுக்காற்று புருவமத்தியாகிய சுழிமுனையில் ஒடுங்குவதாகும்) ரகசியத்தையும் அறிந்துகொள்வார்கள், உடலின் மாசையும் அறிந்துகொள்வார்கள், அறிந்து கொண்டால் மட்டும்

போதாது உடல் மாசாகிய களிம்பு நீங்க வேண்டும், நீங்கினால் இந்த உடம்பு ஒளி உடம்பாகும்.

ஒளி உடம்பு பெறவேண்டுமென்றால், மகான் அழுகண்ணர் சித்தர் பாடிய பாடலில் உள்ள ஞானிகள் நந்தீசர், திருமூலதேவர், காலாங்கிநாதர், போகமகாரிஷி, மகான் சட்டைமுனிநாதர், கொங்கணமகரிஷி, கருவூர் தேவர், சுந்தரானந்தர் மேற்கண்ட எட்டு மகான்களும் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றவர்கள் ஆவார்கள்.

அவர்களின் திருவடியை யார் உருகி பூஜை செய்கின்றார்களோ, அவர்களின் பாவங்களை எல்லாம் பொடிப்பொடியாக்கி, மரணமில்லாப் பெருவாழ்வு பெறச்செய்வார்கள். அவர்கள் ஆணைப் பெண்ணாக்குவார்கள், பெண்ணை ஆணாக்குவார்கள். இறந்தவர்களையும் உயிர்பெறச் செய்வார்கள். இப்பேர்பட்ட ஆற்றல் பெற்றவர்களை அறிந்து பூஜை செய்வதே உண்மையான கல்வியாகும் மற்ற கல்வியெல்லாம் உணவு, உடை மற்ற வசதிகளுக்காக பயன்படுமே தவிர பிறவிப் பிணிக்கு மருந்தாக அமையாது.

எனவே, மகான் அழுகண்ணர் அவர்கள் உலகமக்கள்பால் கருணை கொண்டு இந்தப் பாடலை அமைத்துள்ளார்கள். மேற்கண்ட ஞானிகளைத் தினமும் பூஜித்துவந்தால் பஞ்சமா பாவிகளாகிய சண்டாளர்களுக்கே ஞானம் சித்திக்கும் என்று சொல்கிறார். இந்தக்காலத்தில் ஆன்மிகம் என்ற பெயரில் சிறு தெய்வங்களுக்கு உயிர்க்கொலை செய்தும் மற்றும் ஆரவாரச் சடங்குகள் செய்தும் ஆன்மபலம் பெறாது தன் பிறவியைப் பயனற்றதாக்கிக் கொள்கிறார்கள். வரப்போவது ஞானச்சித்தர் காலம் என்பதால், **மேற்கண்ட ஞானியர் வழிபாடுதான் நிலைத்து நிற்குமே தவிர**

**மற்றதெல்லாம் ஆடிக்காற்றில் இலவம்பஞ்சுபோல் நிலைபெறாது ஓடிவிடும்.**

**குறிப்பு :** மேற்கண்ட எட்டு மகான்களில் யாரை அழைத்தாலும், அச்சணமே வந்து **அஞ்சேல்** என்று சொல்லக்கூடிய வல்லமை அவர்களுக்கு உண்டு. இதைப்பற்றி அறிந்துகொள்வதே சாகாக்கல்வி ஆகும். ஆகவே,

**ஞானியர்களைப் பூஜித்தால் ஞானம் பெற்று இன்புற்று வாழ்வார்கள் என்பது சத்தியம்.**

## பக்தியே பாலனாக்கும்

என்னவே நீயழைக்க எனக்குமுன்னே
எதிரேறி முன்வருவாள் ஆத்தாள்வாலை
சொன்னபேர் அறிந்துநன்றாய் அழைத்துப்பாரு
சூட்சுமிதை உனக்காகச் சொன்னொமப்பா
இன்னபேர் இன்னகுறி யெண்ணவேண்டாம்
ஏகமாய் அறிந்திருப்போம் அப்போநாமும்
முன்னமே அழைக்கையிலே மூமூவென்றால்
முத்திதரும் வாலைபதஞ் சித்தியாமே

**திருமூலர் ஞானம் 84–ல் கவி எண் : 82.**

**மேற்கண்ட கவியின் சாரம் :**

பலகோடி சித்தர்களும் ஞானிகளே. ஞானிகளில் இவர் உயர்ந்தவர், அவர் தாழ்ந்தவர் என்ற பேதமில்லை. அத்துணைபேரும் மானுட தேகம் பெற்ற பயனை அறிந்து, மானுட தேகத்தில் உள்ள மும்மலமாகிய களிம்பை நீக்கி ஞான உடம்பு பெற்றவர்கள் ஆவார்கள். களிம்பாகிய மும்மலம் அற்றுப்போகாவிட்டால், ஞானியாக முடியாது.

ஞானி என்றாலே மும்மலமாகிய களிம்பு அற்ற தேகமுடையவர்கள் ஆவார்கள். அவர்கள் பலகோடி யுகங்கள் வாழும் ஆற்றல் பெற்றவர்கள் ஆவார்கள். பலகோடி ஞானிகளும், ஒரு அணுவைத் துளையிட்டு அதனுள் தங்கும் வல்லமைப்பெற்றவர்களே. அவர்களில் ஒருவர்தான் திருமூலதேவர்.

திருமூலதேவா என்றாலோ, அவர் சீடர்களாகிய காலாங்கிநாதர் என்றாலோ மற்றும் போகமகாரிஷி என்றாலோ அல்லது கொங்கண மகரிஷி என்றாலோ, மேலும் கருவூர் முனிவர் என்றாலோ, அல்லது கமலமாமுனிவர் என்றாலோ எல்லோரும் ஒரே தன்மையானவர்களே.

திருமூலதேவா என்றாலோ எல்லோருக்கும் தெரியும். போகமகாரிஷி என்றாலோ எல்லோருக்கும் தெரியும். எந்த மகானை அழைத்தாலும், அப்போதே எதிரில் தோன்றி, நமக்குள்ள குறைகளை நீக்குவார்கள்.
ஒரு மனிதனுக்கு உள்ள குறையே, சுத்தமும் அசுத்தமும் சேர்ந்திருப்பதை அறிந்து, அசுத்தத்தை நீக்கி, சுத்தமாகிக்கொள்ளாததுதான். அந்த அசுத்தம் எது? சுத்தம் எது? என்று அறியாத அறிவே குறையாகும். அதை அறிந்து நீக்கிவிட்டால் குறையை அறிந்து நீக்கியதாக அர்த்தம்.

மனிதனாகப் பிறந்தால் மோட்சகதி அடையவேண்டும். மோட்சகதி அடையவேண்டும் என்றால், மோட்சகதி அடைந்த திருமூலதேவரை தினமும் உருகி தியானிக்க வேண்டும். தியானித்தால்தான் நம்மை தோற்றுவித்த இயற்கை அன்னை, எப்போதும் இளமையாக இருக்கிறாள். ஆனால் அவளால் தோற்றுவிக்கப்பட்ட நாம் மட்டும்

குழந்தையாகவும், பாலகனாகவும், வாலிபனாகவும், முதியவராகவும் பரிணாம வளர்ச்சிக்கு உட்பட்டு மாண்டுவிடுகிறோம்.

ஆனால், நம்மைத் தோற்றுவித்தவள் மட்டும் அழகு பொருந்திய இளம் மங்கையாகவே இருக்கிறாள். அவளைப் புரிந்துகொள்ள ஆசான் தயவு வேண்டும். தயவு இல்லாமல் அவளைப் புரிந்துகொள்ள முடியாது. அவள், நமக்கு காமத்தை ஊட்டி, நம்மை நரகில் தள்ளுகிறாள். ஆசான் தயவு இருந்தால் அவளே தாயாக மாறி, நமக்கு அமிழ்தபானத்தை ஊட்டி தன்னைப்போல் என்றும் நம்மையும் இளமையாக வைத்திருப்பாள்.

மேற்கண்ட எல்லா நன்மைகளும் அடையவேண்டும் என்றால், ஆசான் திருமூலதேவரை தியானித்து அழைக்கவேண்டும் அல்லது அவர் சீடர்களான காலாங்கிநாதர், போகர், கொங்கண மகரிஷி, கருவூர் முனிவர் மற்றுமுள்ள அவரது சீடர்களை யாரேனும் ஒருவரை ஆசானாக ஏற்று, பூஜித்து ஆசிபெற வேண்டும்.

## மனமுருகி பூஜித்தால் ஏற்படும் நன்மைகள்

நெஞ்சார நினைப்பவர்க்கு நிழல் ஆவானை
நீங்காதார் குலம் தழைக்க நிதியாவானைச்
செஞ்சாலி வயற்பொழில்சூழ் தில்லை மூதூர்ச்
சிலம்பொலி போல் பாடுகின்ற சித்தன் தன்னை
வெஞ்சாபமுமில்லை ஒரு வினையுமில்லை
வேலுண்டு துணைவருங்கால் வெற்றியுண்டாம்
அஞ்சாதீர் என்று யுகயுகத்தும் தோன்றும்
அகத்தியனை அருட்குருவை அகத்துள் வைப்பாம்

–தனிப்பாடல்.

**மேற்கண்ட பாடலின் சாரம் :**

புண்ணியவான் ஆகிய ஆசான் அகத்தீசனை மனமார பூஜித்தால் நோயும், வறுமையும், பகைமையும், மன உளைச்சலுமாகிய வெப்பம் தணிய ஆசான் அகத்தீசன் குளிர்ச்சி பொருந்திய நிழல்போல் இருந்து அருள்செய்வார். மேலும், ஆசான் அகத்தீசனை பூஜைசெய்தால் தனக்கும் தன் சந்ததிகளுக்கும் செல்வநிலை பெருகச்செய்வார். மேலும், ஆசான் அகத்தீசரின் பாடல்கள் அத்தனையும் வளப்பம் பொருந்திய தில்லைவாழ் அம்பலவாணரின் கால் சிலம்பொலிபோல் கேட்க இனிமை உடையதாக இருக்கும். காரணம், ஆசான் அகத்தீசனின் பாடல்கள் அத்தனையும் பிறவிப்பிணிக்கு மாமருந்தாக இருப்பதால் படிக்கவும், கேட்கவும், சிந்திக்கவும் இனிமை உடையதாக இருக்கும். மேலும், ஆசான் அகத்தீசனை பூஜித்தால் அறியாமை காரணமாக பல ஜென்மங்களில் செய்த பாவங்களும் நீங்கும், பிறரால் சபிக்கப்பட்ட கொடுஞ்சாபங்களும் நீங்கும். அதுமட்டுமல்லாமல், **முருகா!** என்றால் ஈரேழு பதினான்கு லோகமும் கிடுகிடுவென நடுங்கும் ஆற்றல்பெற்ற ஆசான் சுப்ரமணியரின் வேல்படை நமக்கு உற்றதுணையாக இருக்கும். மேலும் வெற்றிகளும் உண்டாகும். தொடர்ந்து ஆசான் அகத்தீசனை பூஜைசெய்தால் நாம் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் ஆசான் அகத்தீசர் குருவாக வந்து **அஞ்சேல்!** என்று ஆட்கொண்டு அருள்செய்வார். எனவே ஆசான் அகத்தீசரை தினமும் பூஜிப்போமாக!.

**ஆன்மீகவாதிகளின் தன்னைக் காத்துக்கொள்ள அறிவுரை**

**மகான்ரோமரிஷி அவர்கள் இயற்றிய பூஜா விதி 7–ல் கவி எண் 2–ல் பாடிய பாடல் :**

காப்பான கருவூரார் போகநாதர்
கருணையுள்ள அகத்தீசர் சட்டைநாதர்
மூப்பான கொங்கணரும் பிரம்மசித்தர்
முக்கியமாய் மச்சமுனி நந்திதேவர்
கோப்பான கோரக்கர் பதஞ்சலியார்
கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர்
வாப்பான வாதத்திற்கு ஆதியான
வாசமுனி கமலமுனி காப்புத்தானே.

மேற்கண்ட பாடலில் காப்பான கருவூரார் போகநாதர் என்றும், கருணையுள்ள அகத்தீசர் சட்டைநாதர் என்றும், மூப்பான கொங்கணரும் பிரம்மச்சித்தர் என்றும், முக்கியமாய் மச்சமுனி நந்திதேவர் என்றும், கோப்பான கோரக்கர் பதஞ்சலியார் என்றும், கூர்மையுள்ள இடைக்காடர் சண்டிகேசர் என்றும், வாப்பான வாதத்திற்கு ஆதியான வாசமுனி (வாசமுனி என்பது தூர்வாசர் ஆகும்) கமலமுனி என்றும் ஆசான் ரோமரிஷி அவர்கள் தம்கவியில் பாடியுள்ளார்கள். **இவர்கள்தான் இல்லறம் மற்றும் துறவறத்திற்கு பாதுகாவலர்களாக இருப்பார்கள்.**

மாமேரு எனத்திகழும், இந்த 14 ஞானிகள் அடங்கிய இந்த பாடலை தினமும் காலையிலும், மாலையிலும் படித்து பாராயணம் செய்தும், தினமும் பூஜைசெய்தும் வந்தால், மனிதவர்க்கம் அடையமுடியாத, அறியமுடியாத, உணர முடியாத ஒன்றை நாம் உணர முடியும்.

மேலும், பொல்லாத வறுமை தீரும், கொடிய நோய் தீரும், தீராத நியாயமான வழக்குகள் தீரும், குடும்பத்தில் அமைதி ஏற்படும், தீய நட்பு நம்மை

சார்ந்திருந்தாலும் தானே விலகிவிடும், பண்புள்ள புத்திரபாக்கியம் அமையும், சொந்த வீடு இல்லாதவர்களுக்குச் சொந்த வீடும் அமையும், தீராத கடன் சுமையும் தீரும், செல்வமும் பெருகும், தகுதியுள்ள நட்பும் அமையும், தீய பழக்கங்களுக்கு அடிமையாக இருந்தாலும், தீய பழக்கங்கள் நீங்கிவிடும், கொடிய பகையும் நீங்கும், மன அமைதி ஏற்படும். எதையும் ஆழ்ந்து சிந்திக்ககூடிய சிறப்பறிவு உண்டாகும்.

மேலும், ஆன்மா மாசுபடுவதை அறிந்து, மாசை நீக்கிக்கொள்ளவும் அறிவு உண்டாகும். **நாம் மேற்கொள்ளும் காரியங்கள் எதுவானாலும் குறிப்பாக உத்தியோகம், தொழில், வியாபாரம், விவசாயம், இன்னும் குடும்பத்தில் சுபகாரியங்கள் எதுவானாலும், தடையில்லாமல் நடக்கும். எதிலும் வெற்றி! எப்போதும் வெற்றி! வெற்றியோ வெற்றி!**

**குறிப்பு** : 1) தவம் என்பதே ஞானிகளின் திருவடியைப் பூஜிப்பதுதான் தவமாகும் மற்றதெல்லாம் அவமாகும். ஆகவே, அகத்தீசரைப் பூஜிப்போம்! அருள்பெற்று வாழ்வோம்!

2) மேற்கண்ட ஞானிகள் அத்தனைபேரும் புண்ணியமும், அருந்தவமும் செய்து மிகப்பெரிய அருளாற்றல் பெற்றுள்ளார்கள். இந்தப் பாடலைப் படித்தாலே சாகாக்காலைப் பற்றியும், சாகாக் கல்வியைப் பற்றியும் அறியலாம்.

## எண்ணுவது உயர்வே

நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மைச்
சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னானைத்
தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனுங்
கனத்த மனத்தடைந்தால் உயர்ந் தாரே.

**திருமந்திரம் – 2667.**

**மேற்கண்ட திருமந்திர கவியின் சாரம்:**

பஞ்சபூதமாகிய இயற்கை உயிரினங்களைத் தோற்றுவித்தல், வாழ்வித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் செய்யும் வல்லதாகும். அதே இயற்கையால் தோற்றுவிக்கப்பட்ட மனிதன் அதே இயற்கையின் துணை கொண்டு இயற்கையை வென்றுவிடுகிறான். வென்றதால் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலை செய்யும் வல்லமை பெறுகிறார். அவர்கள்தான் முதுபெரும் ஞானிகள் ஆவார்கள். அவர்களில் மிகப்பெரிய ஞானி மகான் திருமூலதேவராவார்கள். அவரை **திருமூலதேவா!** என்று அழைத்தால் அவர் அக்கணமே **அஞ்சேல்!** என்று அருள்புரியக்கூடிய வல்லமை மகான் திருமூலதேவருக்கு உண்டு. அவரை நினைக்கும் அக்கணத்தில், நினைப்பவர் எதை விரும்பினாலும் அருள்வேன் என்று தம் சீடர்களுக்கு உறுதி கூறுகிறார். அவர் சொல்லுவதில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்று தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மதேவர் மீது ஆணையிட்டு சொல்லுகிறார். **என்னை அழைத்துப்பாருங்கள் உங்களுக்கு வரும் துன்பங்கள் எல்லாவற்றையும் நீக்கி நான் அடைந்த பேரின்பத்தை உங்களுக்கு அருளுவேன்.**

**திருமூலதேவா!** என்று அழைப்பவருக்கு ஞானத்துக்குரிய கல்வி இல்லையென்றாலும் உறுதியாக என் திருவடியைப் பற்றி பூஜித்தால் எல்லா நலமும் வளமும் தந்து ஞானவாழ்வு தருவேன். போதிய கல்வியறிவு இல்லையென்று சோர்வடைய வேண்டாம். ஆன்மிக அறிவு, திணையளவு இருந்தாலும் உறுதியாக என் திருவடியைப் பற்றினால் கடல் போன்ற கல்வி தந்து

உங்களை இரட்சிப்பேன் என்பதை பிரம்மதேவன் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன் என்று கருணையோடு ஆசான் திருமூலதேவர் அருளியுள்ளார்கள்.

## பிறவிப்பிணிக்கு மருந்தே ரோமரிஷி

ஒண்ணாக இந்நூலைப் பார்த்தாயானால்
உறுதிபெற எந்தனைப் போல் ஆகவேணும்
கண்ணான கண்ணாகும் எந்தனுக்கு
கருதென சித்தருடன் வாது பேசி
பண்ணான பொருளறிந்து வாதம் பாரு
பார்க்கையிலே தவறிவிட்டால் வந்து சேர்வேன்
ஒண்ணாகி உன் மனதில் குருவாய் நின்று
ஓதிவைப்பேன் கருக்களெல்லாம் உறுதி தானே.

**ரோமரிஷி 500–ல் கவி எண் : 350.**

தானென்ற மவுனக் கலைக்கியானம் எல்லாம்
சாற்றுவேன் உன்உடலில் கலந்து கொண்டு
ஊனென்ற என்பேச்சை கடந்திடாதே
உறுதிபெற மனத்தில் வைத்து குருவென்று எண்ணி
பானென்ற உலகத்தில் சித்தர்க் கெல்லாம்
பகர்வேன் **ரோமனுட பிள்ளை** என்று
கோனென்ற உன் குருவும் யாரோவென்னிற்
கூறடா ரோமனென்ற பேருந்தானே.

**ரோமரிஷி 500–ல் கவி எண் : 351.**

**மேற்கண்ட மகான் ரோமரிஷி கவிகளின் சாரம்:**

பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பல மகான்களில் ரோமரிஷியும் ஒருவர் ஆவார். அவரை **ஓம் ரோமரிஷி திருவடிகள் போற்றி** என்று உலகத்தில் உள்ள எந்த ஆன்மிகவாதிகள் பற்றுகொண்டு அழைத்தாலும்

**பயப்படாதே மகனே!** என்று அருள் செய்யும் வல்லமை மகான் ரோமரிஷிக்கு உண்டு. அவரை **ஓம் ரோமரிஷி திருவடிகள் போற்றி** என்று காலையில் 10 நிமிடமும், மாலையில் 10 நிமிடமும் நாமஜெபம் செய்தால் நாம் பல ஜென்மங்களில் செய்த பாவங்களை எல்லாம் பொடிப்பொடியாக்கி, ஞானத்திற்குரிய அறிவு தரும் வல்லமை ஆசான் ரோமரிஷிக்கு உண்டு. அவரை ஆசானாக ஏற்று, தவ முயற்சியில் ஈடுபடும்போது தவத்தில் சிறிது தவறு ஏற்படும்போதெல்லாம் அக்கணமே அவ்விடத்தில் தோன்றி உணர்த்துவார். இதை தவசிகள் நன்கு அறிவார்கள். அவரை தொடர்ந்து பூஜைசெய்து வருகின்றவர்களுக்கு உயிரோடும், உணர்வோடும், உணர்ச்சியோடும், நாடி நரம்புகளில் ஊடுருவி அவர் மேற்கொள்ளும் தவமுயற்சிக்கு உற்ற துணையாக இருந்து அருள் செய்வார்.

எனவே, அவரை தினமும் பூஜித்து பெறுதற்கரிய மானுடப்பிறவி பெற்றதின் பயனை அறிந்து, ஆசான் ரோமரிஷி துணைக்கொண்டு ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்ள வேண்டும்.

மகான் ரோமரிஷி அவர்களே **என்னை அழைத்து ஆசிபெற்றுக் கொள்ளுங்கள். மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று இன்புற்று வாழ்வீர்கள்** என்று மனமுவந்து மேற்கண்ட இரு பாடல்களிலும் அருளியுள்ளார்கள்.

## ஆசான் திருவருளே பக்குவப்படுத்தும்

தேவரீர் திருவடிக்கு ஆளாகவும்
அட்டமா சித்தி தந்து அருள்புரியவும்
சித்தர்கணம் எல்லாம் எனக்கு அருள் இரங்கவும்
சித்தம் வைத்து அருள் புரியவும்

பாவி அடியேன் செய்த பாவங்களெல்லாம்
பறந்தோட அருள் புரியவும்
பக்குவம் அறிந்து எனைப் பக்குவ விசேடனாய்ப்
பண்ணி வைத்து அருள் புரியவும்
நாவிட்டு உரைக்க ஒணாச் சோதி நயனத்தூடு
நடனமிட அருள்புரியவும்
நம்பினேன் ஐயனே நட்டாற்றில் என் கைகள்
நழுவிடாது அருள்புரியவும்
மாவேகமாக மெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டும் என்றன் அருகே
மாகுணங்குடி வாழும் என் அகத்தீசனே
மவுன தேசிக நாதனே.

**மகான் மஸ்தான் சாகிப் அகத்தியர் சதகம் 13வது பாடல்.**

இந்த பாடலை தொடர்ந்து பாராயணம் செய்துவந்தால் முன்செய்த பாவங்கள் நீங்கும். மேலும், அறியாமை நீங்கி சிறப்பறிவு உண்டாகும். சிறப்பறிவு உள்ளவர்கள்தான் ஜீவகாருண்யம் பற்றி அறிந்துகொள்ளவும், கடைப்பிடிக்கவும் முடியும். **ஜீவகாருண்யத்தை கடைப்பிடிக்காத மக்கள் என்ன பாடுபட்டாலும் ஆன்மலாபம் பெற முடியாது.** எனவே பாராயணம் செய்வோம்: ஆசான் அகத்தீசனின் ஆசியைப் பெறுவோம்.

## 18 சித்தர்களின் பாதமே துணை

நந்தி அகத்தியர்மூலர் புண்ணாக்கீசர்
நற்றவத்துப் புலத்தியரும் பூனைக்கண்ணர்
கந்திடைக்காடரும் போகர் புலிக்கையீசர்
கருவூரார் கொங்கணர் காலாங்கி அன்பிற்
சிந்தில் அழுகண்ணர் அகப்பையர் பாம்பாட்டி

தேரையரும் குதம்பையருஞ் சட்டைநாதர்
செந்தமிழ்ச் சீர்சித்தர் பதினெண்பேர் பாதம்
சிந்தையுனிச் சிரத்தணியாகச் சேர்த்தி வாழ்வாம்.

**தனிப்பாடல்.**

**மேற்கண்ட கவியின் சாரம் :**

ஆசான் நந்தீசர், மகான் அகத்தீசர், திருமூலதேவர், மகான் புண்ணாக்கீசர், புலத்தீசர், ஆசான் பூனைக்கண்ணார், மகான் இடைக்காடர், ஜோதி ரிஷியாகிய போகர், மகான் புலிப்பாணி சித்தர், அருள்மிகு கருவூரார், வினை தீர்க்கும் கொங்கண மகரிஷி, மகான் காலாங்கிநாதர், அழுகண்ண மகரிஷி, அகத்தின் இயல்பை அறிந்த அகப்பைச் சித்தர், பக்குவமுடைய பாம்பாட்டி சித்தர், தெளிவுமிகு தேரைய மகரிஷி, குணம் மிகுந்த குதம்பைச் சித்தர், தேகமென்னும் சட்டை நீக்கிய சட்டை முனிவர் மேற்கண்ட முத்தமிழ் வித்தகர்களாகிய பதினெட்டு சித்தர்களும் மகா அருள் வல்லவர்கள் ஆவார்கள். அவர்களை தினமும் வரிசைப்படுத்தி நாமஜெபம் செய்து வந்தால் பலபிறவிகளில் **யான்** என்ற கர்வத்தாலும், பொருள் வளமென்னும் செருக்காலும், ஆட்படை அகந்தையாலும் மற்றும் உத்யோக திமிராலும், பொல்லாத காமதேகத்தின் கொடுமையாலும், கொடிய சினத்தாலும் மேலும் புலால் உண்ணுதல், உயிர்க்கொலை செய்தல் போன்ற கொடிய பாவத்தாலும் வந்த கேடுகள் அனைத்தையும் மேற்கண்ட ஞானிகளின் நாமத்தை சொல்லி வந்தால் பாவங்கள் எல்லாம் பொடிப்பொடியாகிவிடும். மேலும் சிறப்பறிவு உண்டாகும்.

**நாம் யார்? நமது பிறவி என்ன? நமது பிறவியின் தன்மை என்ன? இந்த பிறப்பால் அடையக்கூடிய இலாப நஷ்டம் என்னு?** என்பதை அறிய முடியும். நட்டத்தை நீக்கி ஆன்மலாபம் பெற்றுக்கொள்ள முடியும். தொடர்ந்து

வருகின்ற பிறவிக்கு அறியாமைதான் காரணம் என்பதை அறிந்துகொள்ள முடியும். ஆன்ம இயக்கமும் அதை தாங்குகின்ற உடம்பு பற்றியும், அந்த உடம்பால் வருகின்ற நன்மை, தீமைகள் பற்றியும் அறிந்துகொள்ள முடியும்.

உடம்பில் நன்மையும், தீமையும் சேர்த்தே இயற்கை அன்னை படைத்துள்ளான். இந்த உடம்பில் தீமை சேர்த்து படைத்ததின் காரணம், நெல்லுக்கு உமி இல்லை என்றால் மீண்டும் முளைக்காது. ஆகவே, இந்த தேகத்தில் கேட்டையும் ஆக்கத்தையும் சேர்த்து படைத்திருக்கிறாள். கேடாகிய உமி நீங்கினால் அரிசி மீண்டும் முளைக்காது. (புற உடம்பாகிய மும்மல தேகம் நீங்கினால்) அதேபோல் கேடான மும்மலம் என்னும் உமி நீங்கினால் மலமற்ற ஒளி உடம்பாகிய ஜோதி உடம்பு உண்டாகும். ஜோதி உடம்பு உண்டானால் மீண்டும் பிறக்காது. ஆகவே, மேற்கண்ட பதினெட்டு மகான்களை உருகி தியானம் செய்தால், நாம் ஜென்மத்தை கடைத்தேற்றிக் கொள்ளலாம். எனவே, ஞானிகளை பூஜிப்போம்! நலம் பெற்று வாழ்வோம்!!.

**குறிப்பு** : பெறுதற்கரிய மானுடப் பிறவியைப் பெற்றவர்கள் காலம் உள்ளபோதே (இளமை இருக்கும்போதே) அறியவேண்டியவற்றை அறிந்து, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்ள வேண்டும். மனிதவர்க்கத்திற்குத்தான் முக்தி என்று சொல்லப்பட்ட ஒரு ஆன்மலாபம் உள்ளது. அதை நம் அறிவுத்திறத்தால் அறிந்துகொள்ள முடியாது. தக்க ஆசான் வேண்டும்.

**தக்க ஆசானைத்தேடி அலைந்து திரிந்து காலத்தையும் பொருளையும் வினாக்காமல் மேற்கண்ட 18 சித்தர்களும் மிகச்சிறந்த புண்ணியம் செய்த ஞானிகளாவார்கள்.** அவர்களால் ஆகாதது

ஒன்றுமில்லை. நொடிப்பொழுதில் ஆணைப் பெண்ணாக்குவார்கள், பெண்ணை ஆணாக்க முடியும். எழுகடலையும் குடித்து ஏப்பம் விடமுடியும். அதுமட்டுமல்லாது, ஒரு கடுகில் பாதியைப் பிரித்து, அதற்குள் எழுகடலையும் அடக்க முடியும். எனவே மேற்கண்ட 18 சித்தர்களின் திருவடியைத் தியானித்து ஆசி பெறலாம்.

**சத்திய நாடாகிய தமிழ்நாட்டில் முதுபெரும் ஞானிகள் கோடிக்கணக்காகத் தோன்றி, அளவிலா சித்தி பெற்றுள்ளார்கள்.** அவர்கள் நாமத்தை என்று ஒருவர் சொல்கிறாரோ அன்றே அவர் கடவுள் தன்மை அடைய தலைப்பட்டுவிட்டார் என்று பொருள்படும். மனிதவர்க்கத்திற்கு இதைவிட வேறுவழி இருப்பதாக எங்கள் அறிவுக்குப் புலப்படவில்லை.

எனவே, எங்கள் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் மேற்கண்ட 18 சித்தர்களையும் மற்றுமுள்ள பெருமைக்குரிய ஞானிகளையும் பூஜை செய்துதான் பல அற்புதச் செயல்கள் செய்து வருகிறோம். அதனால், நீங்களும் அவர்கள் ஆசி பெற்று, பெறுதற்கரிய மானுடப் பிறவியின் பயனை அறிந்து தக்கவாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று தங்கள் திருவடி பணிந்து கேட்டுக்கொள்கிறோம்.

ஆன்மலாபம் அடைவதற்காக பல்வேறு சடங்குகள் செய்தும், உண்மைப்பொருளை அறியாத ஆன்மீக வேடதாரிகளிடம் சென்று, காலத்தையும், பொருளையும் வீண் செய்வார்கள். காரணம், ஞானிகளின் பெருமையை அறியாமலும், அவர்கள் திருவடியை பூஜித்து ஆசி பெறுவதுதான் உண்மைப் பொருளை அறியக்கூடிய மார்க்கம் என்று அறியாமல் இருப்பவர்களுக்குத்தான்

மேற்கண்ட 18 ஞானிகளையும் அறிமுகப் படுத்துகிறோம். இதை நல்மனதுடன் செய்திருக்கிறோம். மற்றுமுள்ள ஞானிகளின் கவிகளுக்கும் எங்களுக்கு தெரிந்த அளவிற்கு விளக்கம் சொல்லியிருக்கிறோம். குறையிருப்பது இயல்பே. பெரியோர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு 2 :** எல்லாம்வல்ல சிவபெருமான், எல்லா அண்டங்களிலும், எல்லா உயிர்களிலும், எவ்விடத்தும், நீங்காது நிறைந்துள்ளான். அவனை நம்அறிவுத்திறன் கொண்டு அறிய முடியாது. அவனை அறிந்தவர்கள் ஞானிகளே. அவர்களின் திருவடியைப் பூஜித்து ஆசிபெறாமல் ஈசன் திருவருளை பெறமுடியாது. எனவே, குருமுனியாகிய அகத்தீசன் ஆசியைப் பெற்றுத்தான் எல்லாம்வல்ல பரசிவத்தை நம்முள் காணமுடியும்.

**ஆசான் அகத்தீசரை தினமும் பூஜிக்கின்ற மக்கள்தான் ஆழ்ந்தும், அகண்டும், நீண்டும், எங்கும் பரவியுள்ள பரசிவத்தை சிந்தனையால் அறிந்து, சிந்தைக்குள் ஒடுக்க முடியும்.**

### பூஜித்தால் பெருமைக்குரியவரை பூஜிக்க வேண்டும்

அகத்திய மாரிஷி நமா என்றென்றோது
அஷ்ட சித்துதனை ஈவார் குளிகை ஈவார்
அகத்தியரே காஷாய வேட மீவார்
அப்போது சித்தரெல்லாம் கைக் கொள்வார்கள்
அகத்தியரைத் தெண்டனிட்டு மேரு செல்ல
யாருக்குந் தடையில்லை அரசே யென்பார்
அகத்தியர் தாம் எக்கியத்தில் பிறந்த யோகி
ஆயிரத்தெட்டு அண்டமெல்லாம் ஆணையாச்சே.

**மகான் கொங்கண மகரிஷி.**

**மகான் கொங்கண மகரிஷி அருளிய கவியின் சாரம் :**

மனிதவர்க்கத்தில் ஒரு சிலர் நெறியுடன் வாழ்ந்தும், பக்தி செலுத்தியும் வருவார்கள். நோக்கம், **கடவுளை அடைய வேண்டும் என்பதற்காக. கடவுளை அடைய வேண்டுமென்றால் உண்மை பொருளை அறிந்தவர்களுடைய ஆசி வேண்டும்.** ஆசி இல்லாமல் நாம் என்ன முயன்றாலும் விடுபேறு அடைய முடியாது.

**விடுபேறு அடைய விரும்புகின்றவர்கள்** மகான் கொங்கண மகரிஷி அருளிய கடைக்காண்டம் 500ல் எழுபத்தாறாம் கவியான அகத்திய மாரிஷி நமா என்றென்று நாமஜெபம் செய்ய வேண்டும் என்றும், அப்படி நாமஜெபம் செய்து வந்தால் ஆசான் அகத்தீசர் அவர்கள் நமது உணர்வோடும் உணர்ச்சியோடும் நாடி நரம்புகளில் ஊடுருவி, தேக கசடை நீக்கி அஷ்டமா சித்தியையும் தருவார். அதுமட்டுமல்ல குளிகை என்று சொல்லப்பட்ட வாசியையும் நடத்தி தருவார். மேலும், மலமாயையும், மனமாயையும் மற்றும் தேகபந்த பாசத்தையும் நீக்கி, நமக்கு அகத்தீசர் காவி உடை தருவார். ஆசான் அகத்தீசர் காவி உடை தந்தால் அதற்கு பிறகு ஆசான் அகத்தீசர் ஆசிபெற்ற எண்ணிலடங்கா ஞானிகள் நமக்கு உற்ற துணையாக இருந்து அருள் செய்வார்கள்.

எனவே, அகத்தீசர் திருவடியை உருகி தியானம் செய்து வந்தால் யாராலும் அடைய முடியாத மேற்கதி அடையலாம். அகத்தீசரை பூஜை செய்து வருகின்ற மக்களுக்கு எந்த தடைகளும் இருக்க முடியாது. அவர் ராஜயோகம் பெற்ற பெருமை கொள்வார். ஆசான் அகத்தீசர், சுப்ரமணியர் என்று சொல்லப்பட்ட மூலக்கனலில் தோன்றியவராவார்.

எனவே, அகத்தீசரை பூஜை செய்து வருகின்ற அன்பர்களுக்கு ஆயிரத்தெட்டு அண்டத்திலுள்ள தேவர்களெல்லாம் கைகட்டி சேவை செய்வார்கள். ஆகவே, அகத்தீசர் பெருமைக்கு ஈடு இவ்வுலகில் இல்லை. எனவே, ஆசான் அகத்தீசரை பூஜிப்போம்! எல்லா நலமும் வளமும் பெற்று இன்புற்று வாழ்வோம்!!

## அருள்பொருந்திய தேன்மழை

அகத்தியரே பெரும்பேற்றை அடைந்தோர் ஆவார்
அம்மம்மா வெகுதெளிவு அவர் வாக்குத்தான்
அகத்தில் உறைபொருள் எல்லாம் வெளியாய்ச் சொல்வார்
அவர்வாக்கு செவி கேட்க அருமையாகும்
அகத்தியரின் பொதிகையே மேருவாகும்
அம்மலையும் அகத்தியரின் மலையுமாகும்
அகத்தியரின் அடையாளம் பொதிகைமேரு
அவர்மனது அவரைப்போல் பெரியார் உண்டோ.

**–மகான் காகபுஜண்டர்.**

**மகான் காகபுஜண்ட மகரிஷி அருளிய கவியின் சாரம்:**

**உலகத்தில் தன்னை அறிந்து தம்முள் இருக்கும் அரும்பொருளாகிய பரம்பொருளை தவமுயற்சியால் தட்டி எழுப்பியவர்கள்தான் ஞானிகளாவர்.** அந்தவரிசையில் காகபுஜண்டர் என்று சொல்லப்பட்ட ஞானியே மிக உயர்ந்தவர் ஆவார். அவர் பலகோடி யுகங்கள் வாழ்கின்றவர். யுகம் முடியும் காலத்தில் காக்கை வடிவாக உருமாறி, மீண்டும் உலகத்தில் உயிரினங்கள் தோன்றும்போது மக்களுக்கு மனமிரங்கி உபதேசிப்பார். இவரும் ஆசான் அகத்தீசருடைய சீடராவார். ஆசான் அகத்தீசருக்கு எண்ணிலடங்கா ஞானிகள், சீடர்கள் ஆவார்கள்.

அகத்தீசர் பெருமையை கணக்கிட்டு சொல்வதற்கு யாராலும் முடியாது. ஆசான் புஜண்ட மகரிஷி அவர்கள் காகபுஜண்டர் காவியம் ஆயிரத்தில் **அகத்தியரே பெரும்பேற்றை அடைந்தோர் ஆவார்** என்று முதல் வரியில் சொல்லியுள்ளார்.

ஆசான் அகத்தீசர் அவர்கள் அரும்பெரும் தவம் செய்தவர். அவரை காலையில் பத்து நிமிடம், **ஓம் அகத்தீசாய நம** என்றும், மாலையில் அதேபோல் பத்து நிமிடமும் நாமஜெபம் செய்து வந்தால் அவர் பெற்ற பெரும் அருளை நமக்கு வழங்குவார். அவருடைய பாடல்கள் அத்தனையும் சாதாரண கல்வி கற்றவரும் எளிதில் படிக்கக்கூடிய முறையில் மிக ஆழமான கருத்துக்களை எளிய முறையில் பாடியுள்ளார். ஞானம் என்பது இன்னதென்று சொல்லமுடியாத ஒரு ரகசியமாகும். அந்த ரகசியங்களை எவ்வாறு சொன்னால் வருங்கால தொண்டர்கள் உணர முடியுமோ? அதற்கேற்றாற்போல் வெளியாக பாடியுள்ளார். மேலும், அவர் பாடல் கேட்பதற்கு இனிமை உடையதாகவும் இருக்கும். அவர் தவம் செய்து தங்கிய இடம் பொதிகை மலை என்ற மேருவாகும். பொதிகை மலைக்கு அரசனும் அவரே ஆவார். அவருடைய கருணை மேருமலைக்கு ஒப்பாகும். அவர் கருணையால்தான் இதற்குமுன் பலகோடி ஞானிகளும் கடவுள்தன்மை அடைந்துள்ளார்கள். மேலும், வருங்காலத்திலும் பலகோடி மானுடர்கள் பாவத்திலிருந்து விடுபட்டு கடவுள்தன்மை அடைய இருக்கிறார்கள். எனவே, அகத்தீசர் நாமத்தை சொன்னால் நவகோடி சித்தர்களும் நமக்கு உற்ற துணையாக இருந்து மலமாயையும், மனமாயையும், பந்த பாசத்தையும் நீக்கி என்றும் அழியாத பேரின்ப வாழ்வு தருவார்கள்.

நாம் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான வேதங்களையும் மற்றும் நூல்களையும் படித்தபோதிலும் அதில் உள்ள நுட்பங்கள் நமக்கு புரியாது. ஆனால் **ஓம் அகத்தீசாய நம** என்று நாமஜெபம் செய்தால் எல்லா நூல்களையும் படித்து அறிய முடியாத ஞான ரகசியங்களை நாமே அறிந்து உய்ய முடியும்.

ஒருசிலர் பல சாஸ்திரங்களை படித்துபடித்து முதுமை வந்து இறந்துபோனாரே தவிர ஒரு கடுகளவும் உண்மை தெரிந்துகொள்ளவில்லை. காரணம், ஆசான் திருவடியை பூஜைசெய்து பூஜைசெய்து ஆசி பெறவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு தோன்றுவதில்லை. காரணம், அவர்கள் செய்த வினைப்பயன்.

ஞானவாழ்வு என்பது குருவருளால்தான் கைகூடும் என்று புண்ணியவான்களுக்கு மட்டுமே புலப்படுவதாகும். நல்வினை இருந்தால்தான் குருவருள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பார்கள். புண்ணிய பலம் இல்லாத கசடர்கள் தம்தம் திறமை கொண்டு முன்னேற முயற்சிப்பார்கள். இவர்களெல்லாம் களம் சார்ந்த பதராகும். அவர்களிடம் உண்மையை உணர்ந்தவர்கள் சொன்னாலும், யார் உபதேசமும் எனக்கு தேவையில்லை, எனக்கு கல்வி உள்ளது, நானே படித்து தெரிந்து கொள்வேன் என்பார்கள். இவர்கள்தான் நடமாடும் சவமாகும்.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தார்கள் மட்டும்தான் குருவருள் ஒன்றுதான் ஜென்மத்தை கடைத்தேற்ற முடியும் என்று உறுதியாக நம்பி தினமும் ஆசான் அகத்தீசரை பூஜை செய்து வருகிறார்கள்.

மகான் காகபுஜண்டர் உலகமக்கள்பால் கருணை கொண்டு மேற்கண்ட பாடலை அருளியுள்ளார்கள். வருங்கால ஆன்மீக தொண்டர்களுக்கு இந்த பாடலே உபதேசமாகும். எனவே, அகத்தீசரை பூஜித்து ஆசிபெற்று கொள்வோம்! பெரும்பேற்றை பெற்று பேரின்பம் பெறுவோம்!!.

**ஓம் அகத்தீசாய நம என்றால் ஆசான் அகத்தீசரின் சீடர்கள் நவகோடி சித்தர்களும் நமக்கு துணையாக இருந்து ஆசான் அகத்தீசர் திருவடியில் நம்மை சேர்த்து விடுவார்கள்.**

என்னுடைய பேர்சொல்லில் கூட்டிக்கொண்டு
இசையான பொதிகையிலே ஏறுவார்பார்
உன்னுடைய திறங்கண்டபோது தானே
யுறுதியுள்ள சித்தனென்று பேரும்ஈய்வேன்
மின்னுடைய ஒளிகாட்டி அறுதலமும்காட்டி
மெய்ஞான வீடுபெற நிலையுங்காட்டி
பன்னுடைய சிதம்பரமு மேருபூசைப்
பாலிப்போம் அஷ்டாங்கம் பரிந்துகாணே

**அகத்தீசர் பூரண சூத்திரம் 216ல் 97.**

**மேற்கண்ட கவியின் சாரம் :**

அடியார்களுக்கு ஆசான் அகத்தீசர் மனமுவந்து அருளிய உபதேசமாகும்.

**ஓம் அகத்தீசாய நம** என்று என் பெயரைச்சொல்லி அழைத்தால் எனது சீடர்களாகிய ஒன்பது கோடி பேரும் அழைத்தவரை சூழ்ந்திருந்து அவர் விரும்பியதெல்லாம் முடித்து வைப்பதோடுமட்டுமல்லாது என்னுடைய மலையாகிய பொதிகைக்கு **ஓம் அகத்தீசாய நம** என்று

அழைத்தவரை என்னிடம் அழைத்துவருவார்கள். நீ மேற்கொள்ளும் தவத்தின் வைராக்கியத்தைக் கண்டுதான் உன்னை சீடனாக நான் ஏற்றுக்கொள்வேன்.

அதுமட்டுமல்லாது உன்னுள் அடங்கியுள்ள ஜோதியை நான் உள்ளிருந்து நீ ஜோதியைக் கண்டு மகிழும்படி அருள் செய்வேன்.

மேலும், ஆறாதார இயல்பையும் ஐம்பத்தோரு அட்சரமும், மெய்ஞான வீட்டையும் நீ அடையும்படி செய்வேன். மேலும், சிதம்பர இரகசியத்தையும் உனக்கு உணர்த்தி அருள் செய்வேன் மற்றும் அஷ்டமா சித்துக்களையும் தருவேன்.

எனவே, என்னுடைய பெயரை தினமும் சொல்லி, நீ ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்ளவேண்டும் என்று மனமுவந்து மேற்கண்ட பாடலைப் பாடியுள்ளார்கள்.

**ஆசான் நம்மை சீடனாக சேர்த்துக்கொள்வதே புண்ணியம். அதைவிடப் புண்ணியம் மோனநிலையை உணர்த்துவதாகும். அதைவிடப் புண்ணியம் பொறுமையாக இருந்து தவத்தை மேற்கொள்வதாகும்.**

சீசனாம் எனத்தேர்ந்தால் மௌனம்சொல்வார்
சிற்றெறும்பு ஊறையிலே கற்குழிந்தாப்போலே
**பாசமங்கே வைக்கவைக்கப் பாவமெல்லாம்**
**பர்வதம்போல் பஞ்சுவைத்து அணுவளவுதியை**
**நேசமுடன் வைத்தகதை போலேயாச்சு**
நிலைத்துநின்ற குருவுக்கு மனங்கோணலாகா

வேசைமனம் போலாகி அலையாதே நீ
    வேதாந்த குருபதத்தை மேவுமேவே.

**மகான் கொங்கண மகரிஷி அருளிய கடைக்காண்டம் கவி. 270.**

**மேற்கண்ட அருட்கவியின் நடுவில் உள்ள 3 வரிகளின் சாரம் :**

மகான் கொங்கண மகரிஷி உலக மக்கள்பால் கருணை கொண்டு அருளிய அமுத கவியாகும். இந்த பாடலை யாரெல்லாம் பக்தியுடன் படிக்கிறார்களோ அவர்கள் தொட்டதெல்லாம் துலங்கும். அவர்களை பார்த்தாலே பாவம் தீரும்.

**ஞானிகளிடத்தில் பக்தி செலுத்த செலுத்த நாம் பல ஜென்மங்களிலும், இந்த ஜென்மத்திலும் செய்த பாவங்களெல்லாம் பெரியமலைபோன்ற பஞ்சில் அணுவளவு தீயை வைத்ததுபோல் நமது பாவங்களெல்லாம் சாம்பலாகிவிடும். எனவே, சலிப்பில்லாமல் பூஜை செய்து வந்தால் இல்லறமும் சிறக்கும், ஞானமும் கைகூடும்.**

இந்த பாடலை உலக மக்கள் பக்தியுடன் பாராயணம் செய்து வந்தால் எரிமலை, நிலநடுக்கம், புயல், கடல் கொந்தளிப்பு, நிலச்சரிவு, கடும்வறட்சி, கொடுமையான வெயில், சூறாவளி, பெரும் வெள்ளசேதம், அதிகமழை, இடி, மின்னல், அதிக பனி, விண்கற்கள் விழுதல், கடல் அரிப்பு, கொடிய நோய்கள், தீ பரவுதல் போன்ற இயற்கைச் சீற்றங்கள் இந்தியாவிலும் மற்றும் உலக நாடுகளிலும் நடைபெறாது. மேற்கண்ட பாடல் புனிதமான வேதமாகும். இதை தொட்டு வணங்குவதே பூஜையாகும்.

**சமுதாயத்தில் ஜீவதயவு குறைந்து வருவதால் எங்கு பார்த்தாலும் இயற்கை சீற்றங்கள் அளவு கடந்து நடக்கிறது. ஜீவதயவு இருந்தால் எல்லாம் வல்ல இயற்கை அன்னை சாந்தமடைந்து நல்வாழ்வு தருவாள்.**

ஜீவதயவு அல்லது மனிதாபிமானம் அல்லது மனித நேயம் அல்லது ஜீவகாருண்யம் ஆகிய நான்கும் ஒரே பொருளாகும். ஜீவதயவு உண்டாக வேண்டுமென்றால் சாந்தமே வடிவான மகத்துவம் பொருந்திய **அகத்திய முனிவர்,** சிந்தையில் நிலைத்திடும் **ஆசான் நந்தீசர்,** திக்கெல்லாம் புகழ் வாய்ந்த **மகான் திருமூலதேவர்,** அருள் கருவுருவாய் வந்த **மகான் கருவூர் முனிவர்,** ஜீவகாருண்ய வள்ளலாகிய **மகான் இராமலிங்க சுவாமிகள்.**

ஐந்து மகான்களை **ஓம் அகத்தீசாய நம, ஓம் நந்தீசாய நம, ஓம் திருமூலதேவாய நம, ஓம் கருவூர் தேவாய நம, ஓம் இராமலிங்க தேவாய நம** என்று நாமஜெபம் செய்ய வேண்டும்.

மேற்கண்ட ஐந்து மகான்களும் ஜீவகாருண்ய தலைவர்கள் ஆவார்கள். அவர்கள் நாமத்தைச் சொல்லி காலையில் பத்து நிமிடமும், மாலையில் பத்து நிமிடமும் நாமஜெபம் செய்து வந்தால் நமக்கு ஜீவகாருண்ய உணர்வு வரும். ஜீவகாருண்யம் இல்லாதவர்களுக்குத்தான் மூர்க்கத்தனமும், பொல்லாத வறுமையும், கொடிய நோயும், அடிக்கடி விபத்தும் நடக்கும். மேலும் புலால் உண்ணுதல், உயிர் கொலை செய்தல், மது அருந்துதல், சூதாடுதல் போன்ற குணக்கேடுகளும் பற்றிக்கொள்கின்றன.

மேற்கண்ட மகான்களை பூஜை செய்வதால் சிறந்த குணப்பண்பு உண்டாகும், தன்னையும் அறியலாம்,

தலைவனையும் அறியலாம். தலைவனை அறிந்த மக்கள்தான் பேதைமையை உண்டுபண்ணும் மும்மலமாகிய காமதேகத்தைப் பற்றி அறிந்துகொள்ளமுடியும். காமதேகத்தின் சீற்றத்தை தணித்துகொண்டாலே நாமும் கடவுளாகலாம். மேலும், பொல்லாத வறுமை தீரும், செல்வம் பெருகும், குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும், பண்புள்ள புத்திரபாக்கியம் தோன்றும், நோயில்லா வாழ்வும், நீடிய ஆயுளும் உண்டாகும். நம்மிடம் தீயபழக்கவழக்கங்கள் இருந்தாலும், நீங்கிவிடும். தீயநட்பு நீங்கி தகுதியுள்ள நட்பு அமையும். புலால் உண்ணுதல், மது அருந்துதல் போன்ற குணக்கேடுகள் நம்மைவிட்டு நீங்கிவிடும்.

**சாந்தமே வடிவான ஞானியர்களின் அருளை பெறவிரும்புகிறவர்கள் நித்தியம் மேற்கண்ட பாடலை பயபக்தியோடு படித்தும், மேற்கண்ட ஐந்து மகான்களின் நாமத்தைச் சொல்லி பூஜை செய்துவந்தால் முன்செய்த பாவங்கள் தீரும், சிறப்பறிவு உண்டாகும். மேலும், விவசாயம், வியாபாரம், உத்தியோகம், தொழில், கல்வி ஆகிய அனைத்தும் நல்லபடி நடக்கும், இல்லறமும் சிறக்கும், ஞானமும் கைகூடும், மரணமில்லா பெருவாழ்வும் கைகூடும்.**

**குறிப்பு 1**

மேற்கண்ட ஞானிகளை எந்த நேரத்தில் நினைத்தாலும் **அஞ்சேல், அஞ்சேல்** என்று அருளும் ஆற்றல் பெற்றவர்கள் ஆவார்கள். இவர்கள் நாமத்தைச் சொல்லி பூஜை செய்கிறவர்களை கொடிய நோய் உள்ளர்கள் பார்த்தால் நோய் தீரும், புண்ணியமும் பெருகும். இந்த நூல் எங்கெல்லாம் உள்ளதோ அங்கு ஞானிகளும் இருப்பார்கள். நம்மை யாரும் வஞ்சிக்க முடியாது. எல்லாம் நன்மையே நடக்கும்.

குறிப்பு 2

பெண்கள் திருவிளக்கு ஏற்றி அதன் முன் அமர்ந்து இந்த பாடலை பாராயணம் செய்வதோடு, மேற்கண்ட ஐந்து மகான்களின் நாமத்தைச்சொல்லி பூஜை செய்துவந்தால் தகுதி உள்ள கணவன் அமைவான். பண்புள்ள புத்திர பாக்கியம் அமையும். குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். உதிரபோக்கு, வெள்ளைபடுதல் போன்ற துன்பங்கள் நீங்கும். கல்வி கற்கும் பெண்கள் கல்வியில் தேர்ச்சி பெறுவார்கள். குடும்பத்தில் உள்ளவர்களுக்கு எந்த விபத்தும் ஏற்படாது. துன்பம் வந்தபோது தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற கோழைத்தனம் இருக்காது. எதையும் தாங்கிக்கொள்ளும் மனவலிமை உண்டாகும். வீண் ஆடம்பர செலவுகள் செய்வதில் நாட்டம் இருக்காது. குடும்ப வருவாய்க்குத்தக்க செலவு செய்யவேண்டும் என்ற பக்குவம் உண்டாகும். கிடைத்ததைக் கொண்டு மனநிறைவு கொள்ளும் பண்பு உண்டாகும். குடும்பத்தலைவனை அனுசரித்தும் மற்றும் மாமன், மாமி, நாத்தனார் இவர்களிடம் கனிவுடனும் நடந்துகொள்ளும் பரிபக்குவம் உண்டாகும். மேலும் வறுமையில்லாத வாழ்வு உண்டாகும். குடும்பத்தைச் சார்ந்தவர்கள் நம்மிடம் முரண்பாடு இல்லாது அன்புடன் நடந்துகொள்வார்கள். நாமும் அவர்களை மதிக்கக்கற்றுக்கொள்ளும் சிறப்பறிவு உண்டாகும். உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு அலுவலகத்தில் எவ்வித இடையூறும் வராது.

ஆகவே, மேற்கண்ட ஞானிகளை பூஜிப்போம், எல்லா நலமும் வளமும் பெற்று இன்புற்று வாழ்வோம். எல்லாம் வல்ல ஔவையார், காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்ற ஞானிகளை போல் ஞானவாழ்வு பெற்று வீடுபேறு அடைவோம்.

**குறிப்பு 3**

பிறப்பை ஒழிக்கவேண்டும் என்றால், சிறப்பறிவு வேண்டும். அதை புண்ணியத்தினாலும், பக்தியினாலும் அன்றி வேறுவகையில் பெறமுடியாது. அந்த பக்தியும், முற்றுப்பெற்ற முனிவர்களின் திருவடியைப் பூஜித்தால்தான் வரும். பக்தி செலுத்தசெலுத்த புண்ணியம் செய்துகொள்ள வேண்டும் என்ற அறிவும், அதற்கு தேவையான சூழ்நிலையும், மேலும்மேலும் பக்தி செலுத்த வேண்டும் என்ற அறிவும், அதற்குரிய பரிபக்குவமும் உண்டாகும். சிறப்பறிவு துணைக்கொண்டுதான் ஜென்மத்தைக்கடைத்தேற்ற முடியும்.

## ஆசான் சுப்ரமண்யர் திருவடியை வணங்காவிட்டால் வரும் கேடுகள்

எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
ஏக்கற்றி ருக்கும்வெறுவாய்
எங்கள்பெரு மான்உனை வணங்காத மூடர்தலை
இகழ்விறகு எடுக்கும்தலை
கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்
கலநீர் சொரிந்தஅழுகண்
கடவுள்நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத்திழவு கேட்கும்செவி
பந்தம்அற நினைஎணாப் பாவிகள் தம்நெஞ்சம்
பகீர்என நடுங்கும்நெஞ்சம்
பரமநின் திருமுன்னர் குவியாத வஞ்சர்கை
பலிஏற்க நீள்கொடுங்கை
சந்தமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்க கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

தெய்வமணிமாலை – 18

**அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்கசுவாமிகள் அருளிய தெய்வமணிமாலையில் 18ஆம் கவியின் சாரம் :**

முதற்கடவுளும், முதுபெரும் தலைவருமான ஆசான் ஞானபண்டிதரான சுப்ரமண்யரைப் புகழ்ந்து பேசாதவர்களுக்குப் பசித்தபோது வடித்த கஞ்சிகூட கிடைக்காது.

மற்றும், ஆசான் ஞானபண்டிதரை வணங்காதவர்கள் மூடர்களே, அவர்கள் பிழைப்புக்காக திருட்டு விறகு சுமக்கவேண்டிய சூழ்நிலை வரும்.

மேலும், ஆசான் ஞானபண்டிதரான ஆறுமுகப் பெருமானை தரிசிக்காதவர்களுக்கு பலவேறு பிரச்சினைகள் ஏற்பட்டு, தாங்கமுடியாமல் துன்பங்கள் வந்து தொடர்ந்து கண்ணீர் விடுகின்ற சூழ்நிலை வரும்.

மற்றும், ஆசான் ஞானபண்டிதரான முருகபிரான் பெருமைகளை மற்றவர்கள் பேசும்போது பயபக்தியோடு கேட்காத செவிகளுக்கு அகால மரணச்செய்திகள் கேட்கவேண்டிய சூழ்நிலை வரும்.

மேலும், ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகிறவர்கள், தேக பந்தத்தையும், உலக பந்த பாசங்களையும் அகற்ற வேண்டும். அதற்கு, ஆசான் ஞானபண்டிதரான சண்முகநாதனின் ஆசியிருக்க வேண்டும்.

ஆசான் ஞானபண்டிதரின் ஆசி இல்லாமல் தேகபந்தமாகிய காமதேகத்தையும் மற்றும் உலக பந்த பாசத்தையும் வெல்ல முடியாது. மேலும், தேகபந்தமாகிய காமதேகத்தாலும் அதன் தொடர்பான

பந்தபாசங்களிலும் அகப்பட்டும், அடுத்து என்ன ஏற்படுமோ என்று அஞ்சி நடுங்கக்கூடிய சூழ்நிலை வரும்.

மேலும், தேகபந்தமாகிய காமதேகத்தாலும் மற்றும் அதைத் தொடர்புடைய குடும்பத்தார் மற்றும் சுற்றத்தார் ஆகிய பாசங்களை வெல்ல முடியாது. அப்படி வெல்ல முடியாவிட்டால், பிறவியை வெல்ல முடியாது. மீண்டும் மீண்டும் பிறவிக்கு காரணமாகும்.

ஒரு நாளொன்றுக்கு ஒருமுறையாவது **முருகா** என்று சொல்லிவிட்டால் அதுவே எல்லா பந்தபாசங்களையும் உடைத்தெறிந்து, தெளிவான அறிவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும், அதற்குரிய வைராக்கியமும் ஏற்படும்.

இந்த உலகத்தில் ஞானபண்டிதரான சுப்ரமண்யரை வணங்காதவர்கள் நடமாடும் பிணமே ஆவார்கள். அவர்களை மனிதர்கள் என்று சொல்லுவது நியாயமில்லை என்று சொல்லுவார்கள். மற்றும், ஆசான் ஞானபண்டிதரை வணங்காதவர்கள் தனக்குப் பழியை உண்டாக்கும் செயல்களைச் செய்வார்களே தவிர, பண்பான காரியங்களைச் செய்யமாட்டார்கள்.

கடவுள் நமக்கு இரண்டு கைகளைக் கொடுத்ததே முயன்று பொருளீட்டவும், தான் தனது குடும்பத்தார்களுக்கும் மற்றும் அன்புடைய சுற்றத்தார்களுக்கும், தகுதியுள்ள நண்பர்களுக்கும் மற்றும் நம்மை நோக்கி வரும் விருந்தினர்களுக்கும் பயன்படவும், மேலும் பசித்த ஏழைகளுக்கு பசியாற்றவும் மற்றும் ஜென்மத்தைக் கடைத்தேற்றவும், ஆசான் ஞானபண்டிதரான சுப்ரமண்யரை பயபக்தியுடன் கைகூப்பி வணங்குவதற்குமே ஆகும்.

## ஆசான் ஞானபண்டிதரான முருகப்பிரானை வணங்கினால் ஏற்படும் நன்மைகள்

ஐயநின் சீர்பேசும் செல்வர்வாய் நல்லதெள்
அமுதுண்டு உவந்ததிருவாய்
அப்பநின் திருவடி வணங்கினோர் தலைமுடி
அணிந்தோங்கி வாழுந்தலை
மெய்யநின் திருமேனி கண்டபுண் ணியர்கண்கள்
மிக்கஒளி மேவுகண்கள்
வேலநின் புகழ்கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபம் கேட்கும்செவி
துய்யநின் பதம்எண்ணும் மேலோர்கள் நெஞ்சம்மெய்ச்
சுகரூப மானநெஞ்சம்
தோன்றல்உன் திருமுன் குவித்தபெரி யோர்கைகள்
சுவர்ன்னமிடு கின்றகைகள்
சையம்உயர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

**தெய்வமணிமாலை – 19.**

**அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகள் அருளிய தெய்வமணிமாலையில் 19–ஆம் கவியின் சாரம்:**

ஆசான் ஞானபண்டிதரான ஆறுமுகப் பெருமானின் பெருமைகளைப் பேசுகிறவர்கள், தேவர்கள் உண்ணும் அமிழ்தம் உண்ணுகின்றவர்கள் ஆவார்கள்.

மற்றும் ஆசான் ஞானபண்டிதரான சண்முகநாதரின் திருவடியைப் பூஜிப்பவர்கள், பெருமைக்குரிய பதவி பெறுவார்கள்.

மேலும், ஆசான் ஞானபண்டிதரை தரிசித்தவர்கள், மிக்க ஒளிபொருந்திய கண்கள் உடையவர்கள் ஆவார்கள்.

மற்றும், ஆசான் ஞானபண்டிதரின் பெருமைகளைக் கேட்கின்றவர்களுக்கு சுபசெய்திகளே அவர்களுக்கு வரும்.

மேலும், அமுத சொரூபமான ஆசான் ஞானபண்டிதரை தினமும் சிந்திப்பவர்கள் நெஞ்சம் மிக்க சாந்தமுடனும், மகிழ்ச்சியுடனும் இருக்கும்.

மற்றும், தொடர்ந்து ஆசான் ஞானபண்டிதரான சுப்ரமணியரை பூஜித்து வந்தால் வறுமை என்ற சொல்லுக்கே இடமில்லை. செல்வம் மலைபோல் குவியும். நல்ல மனமும் கடல்போல் பெருகி இருக்கும். கொடுக்கும் சிந்தை உள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் பல்வேறு தானங்கள் செய்வதோடு, சொர்ணமாகிய தங்கமும் கொடுக்ககூடிய வாய்ப்பைப் பெறுவார்கள்.

ஆகவே, ஆசான் ஞானபண்டிதரான சுப்ரமணியரை பூஜிப்போம், ஆசிபெற்று இன்புற்று வாழ்வோம்.

## 15.02.2001 அன்று உலக ஆன்மீகவாதிகளுக்கு யாகோபு என்ற மகான் இராமதேவர் அருளிய முதல்நிலை வாசி பழக்க செயல்முறை காண்டம்.

01. தவயோக சக்தியே அரங்கா போற்றி
தவயோக சித்தியே அரசா போற்றி
தவயோக சூட்சுமமே தேசிகா போற்றி
தவயோகி உன்திருவடிகள் போற்றி போற்றி

**02.** போற்றியே யாகோபு எனும் இராமதேவர் யான்
பூவுலகில் விக்ரம ஆண்டு சாலு (மாசி) திங்கள்
போற்றிவிட்டேன் உன்தவ சிறப்பு தன்னை
புகன்றிடுவேன் உன்தொண்டர் அன்பர் ஞானி

03. அன்பர்கள் தவயோக சித்தியடைய
அவரவர்க்கும் வாசியோக சித்தி யளிக்க
உண்மையுடன் விபரமதை உரைத்தேன் நானே
**உலகத்தில் தவம் என்றால் உறுதியாகும்**

04. ஆகுமே தவம் என்றால் தவழ்ந்தே செல்லல்
அன்னதனால் வாசியோக பயிற்சி தன்னை
வாகுடனே படிப்படியாய் உயர்த்த லாகும்
வயதுமுறை தேவையில்லை தொண்டர்கட்கு

05. தொண்டர்கள் வாசியோக பயிற்சி தன்னால்
தானாக மன அமைதி வந்துசேரும்
தொண்டர்க்கு அரங்கர் உன் ஆசியாலே
**தரணியிலே ஞானிநிலை தானாய் சேரும்**

06. சேருமே வாசியோக தொண்டர் யாவும்
சிறப்பான சைவஉணவு நன்ற தாகும்
கருதியே ஞானசித்தி அடைவாரப்பா
கண்டுரைக்க உத்திரதிசை(வடக்கு) நோக்கி நன்கு

07. நோக்கியே ஆசனத்தில் அமர்ந்துகொண்டு
நிலமதனில் மான்முத்திரை கரத்தில் கொண்டு
ஊக்கம்பெற பெருவிரலால் வலது நாசியடைத்து
உலகத்தில் இடதுநாசி வழி சுவாசமதை வெளியேற்றி

08. வெளியேற்றியபின் மெதுவாக உள்ளிழுத்து பூரணமாய்
விளம்பிடவே மோதிர விரலால் இடது நாசியடைத்து
வெளியேற்ற மெதுவாக வாசிதன்னை வலது நாசியில்
விட்டபின் வலதுநாசி வழியே மெதுவாக உள்ளிழுத்து

09. இழுத்துபின் இடதுநாசிவழி மெதுவாக வெளியேற்ற
இதுதானே ஒரு சுற்று வாசியோகம்
தெளிவுபெற உதயகாலம் செய்தல் நன்று
தெரிவிக்க மாலை வேலை செய்தல் நன்று

10. நன்றுபெற முதல்வாரம் ஒரு சுற்று
நாட்டிடவே மறுவாரம் இரு சுற்று
நன்றுபெற அதற்கடுத்து மூன்று சுற்று
நானிலத்தில் அதற்கடுத்த வாரம் நான்கு சுற்று

11. சுற்றுகளை **மிகமெதுவாய்** செய்யச் செய்ய
சிறப்பான பலன்கிட்டும் என உரைப்பேன்
பற்றுதலாய் நான்கு சுற்று பிராணாயாமம்
பாருலகில் அவரவரும் செய்த பின்னே

12. பின்னாக தொடர்புதனில் விபரமுண்டு
பேசிடுவேன் ஞானயோக சித்தி தன்னை
**உண்மையுடன் குளித்தவுடன் செய்ய லாகா**
உலகத்தில் காலைக்கடன் முடித்த பின்னே

13. பின்னாக ஜலம்பருகி வாசி யோகம்
பயின்றிட வேண்டுமப்பா என்று சொல்வேன்
உண்மையுடன் இதற்குதான் சித்தர் யாவும்
உயர்வான கமண்டலத்தை கரத்தில் கொண்டார்

14. கொண்டுரைக்க வெறும் வயிற்றில் பிராணாயாமம்
குவலயத்தில் செய்யலாகா என உரைப்பேன்
உண்டான குளித்தவுடன் செய்வதென்றால்
உலகத்தில் ஏகநாழிகை (அரைமணி நேரம்)
செல்லல் வேண்டும்

15. **வேண்டியே வாசியோக முதல்முறை (வாசிநிலைமுதல்பயிற்சி)**
விளம்பிட்டேன் தொண்டர்கள் உணர வேண்டி
உண்டான உணவு உண்டபின் செய்யலாகா
உலகத்தில் வெறும் அகட்டில் (வயிறு)
ஜலம் பருகிய பின்

16. பின்னாக செய்திட வெற்றியாகும்
பேசிவிட்டேன் தெரிந்தனையா இப்பாகம்தான்
நன்மைதரும் இறையருளே அரங்கா போற்றி
நாட்டிவந்த வாசியோக முதற்படலம் முற்றும் முற்றே

**மேற்கண்ட கவியின் சாரம் :**

வயிற்றில் உணவு இருத்தல், தலைவலி, காய்ச்சல் போன்ற நேரங்களிலும் மற்றும் மனைவியுடன் உறவு கொள்ளும் நாட்களிலும், எண்ணெய் ஸ்நானம் செய்யும் காலங்களிலும், மலச்சிக்கல் இருக்கும் காலங்களிலும், பிராணாயாமம் செய்யக்கூடாது, தியானம் செய்யலாம்.

மனம் ஒருநிலைப்படாவிட்டால் வெட்டவெளியில் சென்று இயற்கை காட்சிகளைக் கண்டுவிட்டு வேறு சிந்தை இல்லாமல் வீட்டிற்கு வரவேண்டும். பின் உட்கார்ந்து பிராணாயாமம் செய்ய வேண்டும். எப்பொழுதும் சைவ உணவைத்தான் உண்ண வேண்டும். மாமிசம், போதைப்பொருட்கள் ஆகாது. மிகுதி உணவும் ஆகாது.

குளித்தவுடன் பிராணாயாமம் செய்யக் கூடாது. அப்படி செய்ய விரும்பினால், குளித்த அரைமணி நேரத்திற்கு பிறகுதான் செய்ய வேண்டும். பிராணாயாமம் செய்யும் முன்பு ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். உணவு வயிற்றில் இருக்கும் காலத்தில் பிராணாயாமம் செய்யக்கூடாது. மலச்சிக்கல் இருந்தால் பாசிபயிறு, பழவகைகள் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இரவு 9.30 அல்லது 10 மணிக்குள் படுத்துவிட வேண்டும். இரவில் 6 மணி நேரம் உறக்கம் வேண்டும்.

மூச்சுக்காற்றை தாங்கும் சக்தி அளவிற்கு மெதுவாக இழுத்துவிட வேண்டும்.

எடுத்துக்காட்டு :

ஆசான் திருமூலதேவர் அருளிய சற்புத்திர மார்க்கத்தைக் கடைபிடித்து பக்தியோகம் செய்யவும்.

**பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்**
**ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை**
**நேசித்திட்ட அன்னமும் நீ சுத்தி செய்துமற்று**
**ஆசற்ற சுற்புத் திரமார்க்க மாகுமே.**

திருமந்திரம் – 1496.

**திருமந்திர கவியின் சாரம் :**

**பூசித்தல்** – பூசனை செய்தல். **வாசித்தல்** – பாராயணம் செய்தல். **போற்றல்** – இறைவனது புகழைச் சொல்லி வணங்குதல். **செபித்திடல்** – குறிப்பிட்ட மந்திரங்களைக் கூறிச் சிந்தித்தல். **ஆசற்ற நற்றவம்** – குற்றமற்ற தவ ஒழுக்கங்களை மேற்கொள்ளல். **வாய்மை**

– உண்மை பேசுதல். **அழுக்கின்மை** – காமாதி அறுபகை நீங்குதல். **நேசித்திட்டு அன்னமும் நீசுத்தி செய்தல்** – அன்போடு ஹம்ச பாவனை செய்தல் ஆகிய இவ்வெட்டும். **மற்றுஆசற்ற சற்புத்திர மார்க்கமாகுமே** – குற்றமற்ற சற்புத்திர மார்க்கத்துக்குரிய உறுப்புக்களாம்.

**குறிப்பு** : பிராணாயாமம் செய்ய விரும்புகிற அன்பர்கள் ஓங்காரக்குடில் ஆசான் அனுமதி பெற்று, ஆசிபெற்றுதான் செய்ய வேண்டும்.

## 01–03–2001 அன்று உலக ஆன்மீகவாதிகளுக்கு யாகோபு என்ற மகான் இராமதேவர் அருளிய பிராணாயாமம் நெறிமுறை ஆசி காண்டம்.

01. ஓம்கார இறையருளே அரங்கா போற்றி
ஓம்கார குடில்வாழும் அரசா போற்றி
ஓம்கார ஜோதியே தேசிகா போற்றி
ஓம்காரன் உன்திருவடிகள் போற்றி போற்றி

02. போற்றியே இராமதேவர் யான் பிராணாயமம் ஆசி
புகலவந்தேன் இதன்காலம் அறிவாயப்பா
போற்றிடும் நாள்விக்ரம ஆண்டுமாசி பதினேழாம் நாள்
பூவுகில் தொண்டர்கள் ஞான வாழ்வு சிறக்க

03. சிறக்கவே நெறிமுறைகள் அளிக்க வந்தேன்
**சிறப்புபெற முறைசெய்தால் யோகம் சித்தி**
அருள்ஞான நிலைஓங்கும் தொண்டர்கட்கு
அறுமுகன் உன் ஆசியினால் மகான்களாவார்

04. மகான்நிலை அடைந்திட நெறிமுறைகள்
மகான் இராமதேவர் வழங்கு வேனே
யோகத்தின் முதல் நிலையே பிராணாயாமம்
ஓங்காரன் நீ யறிவாய் என்று சொல்வேன்

05. சொல்லிடவே பிராணாயாமம் செய்யும் தொண்டர்
சிறப்புபெற உப்பு புளி காரம் குறைத்து
நல்விதமாய் அசைவ உணவனைத்தும் நீக்கி
நவீன உணவு தேநீர் கோக்கோ காபி நீக்கி

06. நீங்கியே முறைசெய்தால் மிகவும் நன்று
நிலமதனில் பொடி, பீடி வெண்குழல் வத்தி (சிகரெட்)
ஊக்கமிலா லாகிரியாம் புகையிலை நீக்கி
**உடம்புதான் ஆலயம் என்ற நிலை யுணர்ந்து**

07. நிலையுணர்ந்து உறுதியுடன் முறைகள் செய்தால்
நீங்காது பல யுகங்கள் வாழலாமே
நிலைவாழ்வு மரணமிலா பெருவாழ்வுதான்
நிலைபெறுவார் தொண்டர்கள் யுக யுகத்தும்

08. **யுகயுகமாய் வாழ்ந்திருக்கும் சூட்சுமம் சொல்வேன்**
**யுகங்களிலே ஞானியாக்கி உலவ வைப்பேன்**
**யுகமதிலே பீடையிலா வாழ்வளிப்பேன்**
யுகத்தினிலே சூட்சுமங்கள் பலவும் பெறுவார்

09. பெற்றிடுவார் அரங்கர் உன் அருளினாலே
பிராணாயாமம் சித்திக்கும் ஆசியுண்டு
பற்றறுத்த யோகிபோல் காய சித்தி
**பண்பான சீடர்கள் பெறுவாரப்பா**

10. அப்பனே யோகசித்தி அடையும் தொண்டர்
அறிவித்த என்வாக்கை சிரமேற் கொள்வார்
ஒப்பில்லா அவர்களெல்லாம் ஞானியாவார்
ஓங்காரன் உணர்ந்துகொள்வாய் உரைத்தேனப்பா

11. அப்பனே அன்பர்கட்கும் தொண்டர்கட்கும்
அருள்சித்தி பெற்றிட நெறிமுறை தந்தேன்
ஒப்பில்லா முறை செய்தால் வெற்றி வெற்றி
ஓதிவிட்டேன் நெறிமுறையின் இப்பாகம் முற்றும் முற்றே

**....சுபம்....**

## மகான் இராமதேவர் அருளிய பிராணாயாமம் செய்யும் சாதகர்களுக்கு விளக்கம் :

- ✱ பிராணாயாமம் செய்யும் சாதகர்கள் உணவில் உப்பு, புளி, காரம் குறைத்து உண்ணவேண்டும்.
- ✱ அசைவ உணவுகள் அனைத்தும் நீக்க வேண்டும்.
- ✱ மேலும் நவீன உணவு என்று சொல்லக்கூடிய டீ, காபி, ஹார்லிக்ஸ், போர்ன்விட்டா, கோக்கோ, மதுபானங்கள், பிஸ்கட், சாக்லெட் வகைகள், கேக் அனைத்தும் நீக்க வேண்டும்.
- ✱ மேலும், மூக்குப்பொடி, பீடி, வெண்குழல் வத்தியாகிய சிகரெட், சுருட்டு, புகையிலை, கஞ்சா போன்ற லாகிரி (போதை) பொருட்களை நீக்கி உடம்புதான் ஆலயம் என்ற நிலையுணர்ந்து செயல்பட வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.**

**திருமந்திரம் – 1793.**

- ✱ யோகப்பயிற்சியில் ஈடுபடும் அன்பர்கள் பிரம்ம முகூர்த்த நேரமாகிய 4.30 மணிக்கு எழுந்து,

காலைக்கடன்களை முடித்து, 10 நிமிடம் சித்தர்கள் போற்றித்தொகுப்பினைப் படித்தும், திருஅருட்பா, திருவாசகம், திருமந்திரம், திருக்குறள், தாயுமான சுவாமிகள் பாடல்கள் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு நூலை 10 நிமிடம் படிக்கவேண்டும்.

❋ வயிற்றில் உணவு இருக்கக்கூடாது. ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்கவேண்டும். வெறும் வயிற்றில் செய்யக்கூடாது.

❋ வடக்கு புறம் நோக்கி வெண்ணிற துணியில் (அல்லது) பாயில் அமர்ந்து மான் முத்திரை போல் கைகளை வைத்து, முதுகின் நடு எலும்பு (நடு வினா தண்டு) நிமிர்ந்து இருக்க வேண்டும். அதன் பின்னர் பிராணாயாமம் செய்தால் ஆசி கிடைக்கும்.

## முறைதவறிய வாசிப்பயிற்சி

காணும் மூச்சடக்கி விழியதும் உருட்டிக்
கபாலமும் திறந்தனர் கோடி
கனத்த வாய்வதனால் குன்மநோய் அணுகி
கலங்கினோர் அவர்ஒரு கோடி
தோணும் மெய்மறந்து சுழன்று உடன்எழும்பி
சொக்கினோர் அவர்ஒரு கோடி
சூலை வாழ்வு அணுகி சுவாலையும் எழும்பிச்
சுரமதால் இறந்தனர் கோடி
ஊண உண்நாக்கை அண்ணாக்கையுள் தூக்கி
உள்ளடங் கிணர்களுங் கோடி
உயர சாண்நீள முழுவதும் எழும்பி
ஓங்கியே ஒடுங்கினோர் கோடி
பேண அதிசார பேதிவந்து அணுகிப்
பிறவியும் இழந்தனர் கோடி
பெருமையாய்க் கர்ப்ப சாதனை அறியாது
பிராணனும் அழிந்து மாண்டனரே.

**புலஸ்தியர் கற்பம் 300–ல் 97.**

மகான் புலத்தீசர் அவர்கள் 18 சித்தர்களில் ஒருவரும், அகத்தீசரின் பிரதான சீடர்களில் ஒருவருமாவார்.

சிலர் பிராணாயாமம் அல்லது யோகப்பியாசம் அல்லது வாசிப்பயிற்சி செய்வார்கள். நோக்கம் மரணமில்லாப் பெருவாழ்வு பெறுவதற்காக. பிராணாயாமம் அல்லது யோகாப்பியாசம் அல்லது வாசிப்பயிற்சி செய்வது, ஆன்மீகத்திற்கு மூன்றாம் படியாகும்.

யோகப்பயிற்சியாகிய வாசிப்பயிற்சி செய்ய வேண்டும் என்றால், குருநாதராகிய ஆசான் அகத்தீசர் ஆசி இருக்க வேண்டும். ஆசி பெற்று யோகப்பயிற்சி செய்தால் இடது கலையாகிய சந்திர கலையும், வலது கலையாகிய சூரியகலையும், புருவமத்தியாகிய சுழிமுனையில் ஒடுங்கும். அப்படி ஒடுங்கினால், பலகோடி யுகங்கள் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று வாழலாம்.

ஆசான் அகத்தீசர் ஆசி இல்லாமல் யோகப் பயிற்சி செய்தால் மரணம் ஏற்பட்டுவிடும்.

மகான் புலத்தீசர் கற்பம் 300ல் 97 ஆம் கவியில் மூச்சுக்காற்றின் இயல்பறியாமல் காற்றை இழுத்து அப்படியே வெளியிடாமல் நிறுத்தினால் அது கபாலம் வழியாக மேலே உடைத்துக்கொண்டு வெளியேறும். மேலும், கண், மூக்கு வழியாக இரத்தம் வெளியாகி இறந்துவிடுவார்கள்.

மூச்சுக்காற்றின் இயல்பறியாமல், மேலும் மேலும் காற்றை உள்ளே இருத்தினால் மலச்சிக்கல் ஏற்பட்டு, குடல் புண் வந்து வயிற்று வலியால் அல்லல்பட்டு சாவார்கள்.

ஒருசிலபேர் மூச்சைக் கட்டி ஒரு ஜான் உயரம் அப்படியே பறப்பார்கள். பிறகு, தன் நினைவாற்றல் இல்லாது இறந்துவிடுவார்கள். மேலும், மூச்சுக்காற்றின் இயல்பு அறியாமல் வாசிப்பயிற்சி செய்தால் சூலை நோய் ஏற்பட்டு சுரம் வந்து இறந்துவிடுவார்கள்.

ஒருசிலர் நாக்கின் கீழ்ப்பகுதியை தினமும் சிறிது சிறிதாக அறுத்து இந்த நாக்கைக் கொண்டு உள்நாக்கில் செலுத்துவார்கள். செலுத்தி நாக்கு உள்ளே அடங்கி வெளிவராமல் மூச்சுத்திணறி இறந்துவிடுவார்கள்.

ஒருசிலர் உடல்கூறு அறியாமல் பிராணாயாமம் செய்வார்கள். செய்தால், மலச்சிக்கல் ஏற்பட்டும், அஜீரணக்கோளாறு ஏற்பட்டும், தொடர்ந்து வயிற்றுப்போக்கு போகும். யோகப்பயிற்சிக்கு இது சகஜம் என்று எண்ணுவார்களே தவிர, முறை தவறிய வாசிப்பழக்கம் என்று அறியமாட்டார்கள். இவர்கள் ஆறுமாதம் அல்லது ஒரு வருடம்தான் உயிரோடு இருக்க முடியும், மாண்டு விடுவார்கள் என்று கருணைகொண்டு அருளியுள்ளார்கள்.

இனமறி யாமல் இருத்தியே வாய்வை
　　இறந்தனர் அவர்ஒரு கோடி
　　இனிய தம்பனஞ்செய்து எழும்பியே கும்பித்து
　　ஏங்கினோர் அவர்ஒரு கோடி
கனமறி யாமல் கரத்தை வாயுவினால்
　　கருதியே இறந்தனர் கோடி
　　கண்டு வாசியினில் ஒன்றைவிட்டு ஒன்று
　　கலங்கியே மடிந்தனர் கோடி
தினம்ஒரு நாழி வாசிகொண்டு இழுத்துச்
　　சிவபுரம் ஏகினோர் கோடி

தெளிந்திடும் கண்மூக்கு எனுமதைப் போற்றி
சிறந்தனர் அவர்ஒரு கோடி
தன்பெரு விரலால் அண்ணாக்கை ஏற்றித்
தயங்கினர் அவர்ஒரு கோடி
சலமதில் மூழ்கிச் சாதனை அதீதச்
சாக்காடுவந்து எய்தினோர் அறிந்தே.

**புலஸ்தியர் கற்பம் 300–ல் 98.**

மகான் புலத்தீசர் கற்பம் 300ல் 98ஆம் கவியில் **சிலபேர் வலது நாசிப்பக்கம் மூச்சுக்காற்றை இழுத்து, இடது நாசிப்பக்கம் விடுவார்கள். மேலும், இடது நாசிப்பக்கம் மூச்சுக்காற்றை இழுத்து, வலது நாசிப்பக்கம் விடுவார்கள். இதுஒரு முதல்நிலைப் பயிற்சியே. இதைத் தொடர்ந்து செய்து வந்தால், நோய் ஏற்படக் காரணமாகும்.**

**ஒருசிலர், தன் பெருவிரலால், உள்நாக்கை ஏற்றியும், மேலும் தண்ணீரில் நாழிகைக் கணக்காக மூழ்கி யோகம் செய்வார்கள். இறுதியில் மாண்டு விடுவார்கள்** என்று கருணை கொண்டு அருளியுள்ளார்கள்.

அறிவது இவ்வாறின் கருத்தினை இயம்ப
அவணியின் மாந்தருள் சிலபேர்
அம்புவி தனிலே மறையவும் குழிசெய்து
அதனிலும் பதுங்கினோர் கோடி
சரிந்திடு கதலி வாழையின் குழைபோல்
தத்தளித்தன அவை போலும்
தயங்கினர் அனேகர் சாகர மதனில்
தாம்விழுந்து அலைவது போலும்
தரணியிற் சிலபேர் தாமரை யிலைதண்
ணீரெனத் தவித்தன ரப்பா
பாருலக அதீதம் தேடியும் குருவின்

பதமடை யாமலும் மாண்டார்
தெரிந்தும் இப்பரிசே உத்தமர் அனேகர்
தெளிந்தவர் அறிந்துமே செப்பச்
சீறிடும் வாசி யோகத்தின் பெருமை
திருத்தமாய் உரைத்திட லாமே.

**புலஸ்தியர் கற்பம் 300ல் 99.**

மகான் புலத்தீசர் கற்பம் 300ல் 99ஆம் கவியில் ஒருசிலர் சமாதியாகப்போகிறேன் சமாதியாகப்போகிறேன் எனச் சொல்வார்கள். அவர் சாகப்போவது நிச்சயமே. சமாதி உருவாக்கி, அதில் உட்கார்ந்து தியானம் செய்வார்கள். மேலே உள்ளவர்கள், கல்லை வைத்து மூடிவிடுவார்கள். உள்ளே காற்றோட்டம் இல்லாமல் மூச்சுத்திணறி வெளியில் இருப்பவர்களை திறந்துவிடும்படி உள்ளிருந்து கத்துவார். வெளியில் இருப்பவர்களுக்கு காதில் விழாது. உயிர் போகும் வரை உள்ளிருந்தே அல்லல்பட்டு சாவார்கள். அது அவர்கள் செய்த பாவமே. அப்படி ஒரு தண்டனை அவர் அனுபவிக்கவேண்டி உள்ளது.

சமாதி என்பது இடதுகலையாகிய சந்திரகலையையும், பிங்கலையாகிய சூரியகலையையும் சேர்த்து, ரேசித்து, பூரித்து புருவமத்தியில் கும்பித்தால், அந்த காற்று புருவ மத்தியாகிய சுழிமுனையில் ஒடுங்கிவிடும் அதுவே ஜீவசமாதியாகும். இதை அறியாமல், குழிக்குள் பதுங்கினால் அது சமாதியாகாது. இதை ஆசான் அகத்தீசர் ஆசி இல்லாமல் உணர முடியாது.

சிலபேர் குருபகவானாகிய ஆசான் அகத்தீசரை உருகி தியானிக்காமல் பிராணாயாமம் செய்தால் பல்வேறு விதமான நோய்கள் ஏற்பட்டும், கைகால் வீங்கியும், வயிறு

விங்கியும் பரிதாபமாக தாமரையிலை தண்ணீர்போல தவிப்பார்கள். இதுவும் அவர்களுடைய வினைப்பயனே.

ஆசான் தயவு தேவையில்லை யோக நூல்களைப் படித்தே, யோகப்பயிற்சி செய்து முன்னேறலாம் என்று நான் என்ற ஆணவத்தோடு அநியாயமாக செத்து மடிந்தவர்கள் கோடானுகோடியாகும். அவர்களிடம், ஆரம்பத்தில் இதுபோன்ற வாசிப்பழக்கம் செய்வது தவறு என்று சொன்னாலும், அவன் செய்த பாவம் உணர முடியாமல் போய்விடும். எனவே, யோகப்பயிற்சியாகிய வாசிப்பயிற்சியை ஆசான் துணைகொண்டு செய்ய வேண்டுமே தவிர அவரவர்கள் விருப்பத்திற்கு யோகப்பயிற்சிகள் செய்தால் சாகத்துணிந்துவிட்டனர் என்றே பொருள்படும்.

**குறிப்பு** : ஆசான் அகத்தீசர் திருவடியை உருகி தியானிக்க தியானிக்க முன்செய்த பாவங்கள் தீரும். பாவங்கள் தீர்ந்தால் ஆன்மாவைப்பற்றி அறியக்கூடிய சிறப்பறிவு உண்டாகும். மூச்சுக்காற்று இயக்கமே ஆன்மா இயக்கம் என்று அறிந்து கொள்வார்கள்.

ஆசான் அகத்தீசரின் அருளை பூரணமாகப்பெற்றால் ஆசான் அகத்தீசரே மூச்சுக்காற்றோடு கலந்து, இடகலையையும், பிங்கலையையும் சேர்த்து, புருவமத்தியாகிய சுழிமுனையில் காற்றோடு தானும் கலந்து உள்ளே தங்கிவிடுவார்கள். அப்படித் தங்கினால் தூலதேகமாகிய காமதேகம் மெல்ல மெல்ல விடுபட்டு, சூட்சுமதேகமாகிய ஒளியுடம்மைப் பெறுவார்கள். அப்படிப் பெற்றவர்கள்தான் பலகோடி யுகங்கள் மரணமில்லாப் பெருவாழ்வு பெற்று வாழ்வார்கள்.

குளவி, தனக்கு விருப்பமான புழுவைக் கொண்டுவந்து தன் கூண்டில் வைத்து அந்தப் புழுவை தன்உருவாக வரவேண்டும் என்று தினமும் நினைக்கும். நினைக்க

நினைக்க அந்தப் புழு குளவியாக மாறும். இதேபோல், நாம் ஆசானை நினைத்து உருகி, தியானிக்க தியானிக்க நாமும் ஆசான் ஆகலாம்.

**ஆதாரம் :**

**பச்சை மண் பதுப்பிலே பழுப்பதிந்த வேட்டுவன்**
**நித்தம் நினைத்திட நினைத்தவண்ணம் ஆயிடும்**
**பச்சைமண் இடிந்துபோய் பரந்ததும்பி ஆயிடும்**
**பித்தர்காள் அறிந்து கொள்க பிரானிருந்த கோலமே.**
**சிவவாக்கியர் பாடல் – 107.**

ஆசான் அகத்தீசரால் வாசி நடத்தித்தராமல், நாமாகச் செய்வதெல்லாம் நரகத்திற்கு வழிகாட்டுமே தவிர, சொர்க்கத்திற்கு வழிகாட்டாது.

ஒருசில புண்ணியவான்கள் மட்டும், ஆசான் அகத்தீசர் ஆசிபெற்றுதான் பிராணாயாமம் செய்ய வேண்டும் என்று உணர்ந்து, மெல்லமெல்ல வாசிப்பழக்கம் செய்து, மூச்சுக்காற்றை புருவ மத்தியாகிய சுழிமுனையில் வசப்படுத்திக் கொள்வார்கள். அவர்களே சிறப்பறிவு உள்ளவர்கள். மேலும், மரணமில்லாப் பெருவாழ்வு பெற்றவர்கள் ஆவார்கள்.

சிலர் குரு அருளாகிய பக்திநெறியை போதிக்காமல், யோகப்பயிற்சி சொல்லித்தருவதாகச் சொல்லுவார்கள். பலபேரையும் நோய்வாய்ப்படச் செய்து அல்லல்படச் செய்துவிடுவார்கள். இதை சொல்லிக்கொடுப்பவர்–களுக்கு மிகப்பெரிய பாவம் சேரும். மேலும், நரகமும் உண்டு. அவர் பேச்சைக் கேட்டு சாதனத்தில் ஈடுபடுகிறவர்களுக்கும் நரகம் உண்டு என்று கருணையோடு அருளியுள்ளார்கள்.

ஞான குருவாகிய ஆசான் அகத்தியர் திருவடியை பூஜை செய்யாமல், பிராணாயாமமாகிய யோகப்பயிற்சி அல்லது வாசிப்பயிற்சி செய்கிறவர்கள், பலவகையான நோய்க்கு ஆட்பட்டு செத்தவர்கள் கோடான கோடிப்பேர்களாவர்.

ஆசான் அகத்தியர் திருவடியை தியானம் செய்து, பிராணாயாமம் என்கிற யோகப்பயிற்சி அல்லது வாசிப்பயிற்சி செய்கிறவர்களுக்கு வாசி வசப்பட்டு, மரணமில்லாப் பெருவாழ்வு பெறுகிறார்கள்.

ஆசான் புலத்தீசர் அவர்கள் ஆசான் அத்தீசரின் அன்புச் சீடராவார். அவர் மனமிரங்கி **பிராணாயாமமாகிய யோகப்பயிற்சி அல்லது வாசிப்பயிற்சி அல்லது வாசிப்பழக்கம் செய்கிறவர்கள், குருநாதராகிய ஆசான் அகத்தீசன் ஆசியில்லாமல் செய்யக்கூடாது** என்று கருணையோடு அருளியுள்ளார்கள்.

**குறிப்பு**

மேற்கண்ட கருத்துகள் அனைத்தும் யோகாப்பியாசம் என்ற உடற்பயிற்சியைக் குறிப்பது அல்ல. பிராணாயாமமாகிய மூச்சுப்பயிற்சி அல்லது வாசிப்பழக்கம் மேற்கொள்பவர்களுக்கு மட்டுமே இதைக் குறிப்பதாகும்.